بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர்:—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 4	1927௵ ஜூன்௴	பகுதி. 6

ஹஜ்ஜை விடுவதன் குற்றம்.

ஹஜ்ஜு இஸ்லாமின் ஓர் முக்கியமான பர்லாகும். (கடமை) ஹஜ்ஜின் பர்ளு ஏனைய பர்ளுகளைப் போலவே கண்ணிய முடையதாகும். இஸ்லாமின் மற்ற முக்கியமான பர்ளுகளை மறுப்பது காபிராகும்படி செய்வது போலவே, ஹஜ்ஜு பர்லல்லவென்று மறுப்பதும் காபிராகும்படி செய்துவிடும். ஏனெனின், மற்ற பர்ளுகளை விடுவதானது முஸ்லிம்களை பாவியாக ஆக்கிவிடுவது போல், ஹஜ்ஜை விடுவதானது பாவியாக ஆக்கிவிடுகிறது. "எவன் ஹஜ்ஜு செய்வதற்கான எல்லா வசதிகளையும் பெற்றிருக்கும் நிலைமையில், ஹஜ்ஜு செய்யாமல் இறந்து போகிறானோ, அவன் பாவியாகவே மரணமடைந்தானென்பது "இஜ்மா ஆன தீர்மானமாகும்" என அல்லாமா ஜைலயீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் நகல் செய்திருக்கிறார்கள். (ரத்துல் முக்தார் 2-ம் பாகம், 140-ம் பக்கம்.)

ஹஜ்ஜை பர்லாக்கும் திரு குர்ஆன் ஷரீபு ஆயத்தின் இறுதியில் "மன் கபர" என்றதன் கீழ் (1) மேற்கூறிய ஆபத்து ஹஜ்ஜை விடுவதன் விஷயமாயும், (2) பர்லை மறுப்பதையும் குறிப்பிடுகிறது என்று

முபஸ்ஸிரீன்கள் இருவிதமான அபிப்பிராயத்தை வரைந்திருக்கின்றார்கள். ஹஜ்ஜை விடுவது குப்ர் என்றறிவிப்பதற்கு ஆதாரமாவது: அல்லாஹுத ஆலா மேற்கூறிய ஆயத்தில் ஹஜ்ஜு செய்யும்படி ஏவி, அதன் பின்னர் "மன் கபர" என்பதை அருளியிருப்பதைக் கொண்டு "ஹஜ்ஜை விடுவது குப்ராகும்" என்ற கருத்தைக் கொண்டிருக்கிறதென்பது நன்கு புலனாகிறது. கீழ்வரையப் பட்டிருக்கும் ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ரிவாயத்தும், ஹஜ்ஜை விடுவது குப்ர் என்பதை அதி முக்கியமாய் அறிவுறுத்துகின்றது.

ஹஜ்ஜை விடுபவன் பாவியாவான் என்பதைப்பற்றி இமாம் பகர்தீன் ராஜீ அவர்கள், கிபால் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களின் விடையை எடுத்தெழுதி யிருப்பதாவது:—அல்லாஹுத ஆலா தனது குர்ஆன் ஷரீபில் "ஹிருதயம் தொண்டவரை யெத்தி (சமீபித்து) விட்டது" என்று அருளியிருப்பதைக் கொண்டும், ஹதீதில் "எவன் தொழுக வேண்டியது பர்லு என்பதை யறிந்திருந்தும், தொழாதிருப்பவன் காபிராகி (குப்ருக்கு முடுகி) விட்டான் என்றும் வந்திருப்பதற் கேற்ப, ஹஜ்ஜை நிறை வேற்றாது விட்டதனால் அவன் குப்ருக்கு முடுகி விட்டான்: ஆகவே, அவனை பாவி (பாஸிக்) என்பது ஆகும். (தப்ஸீர் கபீர் 3-ம் பாகம், 13-ம் பக்கம்.) ஸ்த்தியும், வேறொரு வகுப்பும் "மன் கபர" என்பதற்கு எவன் ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கான எல்லா நிபந்தனைகளையும் பெற்றிருப்பதோடு, ஹஜ்ஜு செய்யாதவன் காபிராகுவான்" என்று சொல்லுகிறார்களென்று இப்னு ஹப்பான் அவர்கள் வரைந்திருப்பதோடு, அக்"குப்ர்" என்ற வார்த்தைக்கு "பாவி' யென்பதே கருத்தாகும் என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (பஹ்ரமுஹீத் 3-ம் பாகம், 12-ம் பக்கம்.)

மற்ற தப்ஸீர்களில் ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா போன்றவர்களின் மூலமாய் நகல் செய்யப் பட்டிருப்பதாவது:—ஹஜ்ஜை நிறை வேற்றாது விட்டவன் குப்ருக்கு முடிகிவிட்டானென்பதும், ஹஜ்ஜை மறுப்பவன் காபிராகி விட்டானென்பதுமே.

ஹதீது ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் ரிவாயத்துச் செய்யப்படிருப்பதாவது:—"எவன் பைத்துல்லாஹ் (திருமக்காவிலுள்ள கஃபா)வைத் தரிசிக்கப் போய் வருவதற்கான ஐசுவரியத்தை பெற்றிருக்கும் நிலைமையில், ஹஜ்ஜை நிறைவேற்றாது மரணமடைந்து போவானாயின், அவன் யூதனாகவும், கிறிஸ்துவனாகவும் இறந்து போனான் என்பதில் யாதும் சந்தேகமில்லை. ஏனெனின், பைத்துல்லாஹ் வைத்தரிசிக்க சக்தியிருப்பவர்களின்பேரில் அல்லா

ஹூ தஆலா ஹஜ்ஜை பரலாக்கியிருக்கிறான்". என நம்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். (திர்மதீ, பைஹகீ, இப்னுஜரீர், இப்னு அபீ ஹாதம்.) ஆனால், ஹில்லால் இப்னு அப்துல்லாஹ் இன்னாரென்று அறியப்படாதவராகவும், ஹாரிஸ் லயீப்-ஞாபக சக்திக் குறைவானவராக விருக்கும் நிலைமையில், நம்பத்தகுதியற்றதாக மேற்கூறிய ரிவாயத் இமாம் திர்மதீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்களிடம் கிட்டியதாக வரைந்திருக்கிறார்கள். ஆனால், ஷாரிஹ் தீபீ அவர்கள் மேற்கூறிய ரிவாயத்தின் பொருள் கொண்டதாகவே அபூ இமாமாஹ்வைக் கொண்டு ஒரு ரிவாயத்துச் செய்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு லயீபான—பலயீனமான ஹதீது பல தரப்பட்டதாக அறிவிக்கப்படும்போழ்து, அதன் உண்மையான கருத்தை யொப்புக்கொள்ளப்படும்.

இமாம் பைஹகீ அஹ்மது, அபூயுஅலா, ஸயீதிப்னு மன்ஸூர் ஆகியவர்கள் அபூ இமாமாவின் ரிவாயத்தை கீழ்காணுமாறு வரைந்திருக்கிறார்கள்:—"எவன் ஹஜ்ஜுக்கு போய்வருவதற்கான செலவுக்கு முதலுடையவனாக விருப்பதோடு, ஹஜ்ஜு யாத்திரைசெய்வதைத் தடுக்கக்கூடிய நோயும், அநியாயக்கார இராஜனால் ஹஜ்ஜுக்குப்போகக்கூடாதென்ற தடையுத்திரவுமில்லா திருக்கும்போது, ஹஜ்ஜை நிறைவேற்றாது இறப்பவன் யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ இறப்பானென்று நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியதாய் அபூஇமாமா அவர்கள் கூறியிருக்கிறார்கள். (தர்மன் ஷூர் 2-ம் பாகம், 56-ம் பக்கம்.) மிஷ்காத் ஷரீபில் இதேரிவாயத்தை சில சொற்கள் கூடுதல் குறைவோடு எடுத்தெழுதப்பட்டிருக்கிறது.

அல்லாஹுதஆலா தனது குர்ஆன் ஷரீபில் "அல்லாஹ்வுக்காக அவனின் கஃபாவைத்தரிசிப்பது (ஹஜ்ஜு செய்வது) மனிதர் (முஸ்லிம்)களின் பேரில் பர்ளு-கடமையாகும். ஆனால், அதை விடுபவன் காபிரா (பாவியா) வான். (ஏனெனின், ஹஜ்ஜை விடுபவன் உண்மை முஸ்லிமாகான்) என்று திருவுளமாகியிருப்பதை ஆதாரமாக்கக்கொண்டே, ஹஜ்ரத் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "ஹஜ்ஜை விடுபவன் யூதனாக அல்லது, கிறிஸ்தவனாக ஆகிவிடுவான்" என்று திருவாய் மலர்ந்தருளியதாக மேற்கூறிய ரிவாயத்தின் கீழ் திருமதியில் வரைந்திருக்கிறார்கள். ஹஜ்ரத் ஷாஹ் வலியுல்லாஹ் தெஹ்லவி ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் வரைந்திருப்பதாவது:—"இஸ்லாமின் எந்த முக்கியமான பர்லையும் விடுவதானது தீனைவிட்டும், இதரமார்க்கத்திற்கு மாறுவதைப் போலாகும். யூதர்

களும், கிரிஸ்தவர்களும் தொழுகிறார்கள். ஆனால், ஹஜ்ஜு செய்வதில்லை. ஆகவே, ஹஜ்ஜு செய்யாதவர்கள் யூதர், கிரிஸ்தவர்களுடன் சேர்க்கப்படுகின்றனர். மக்கத்து முஷ்ரிக்குகள் ஹஜ்ஜு செய்கின்றனர். ஆனால், தொழுவதில்லை. ஆகவே, தொழாதவர்கள் முஷ்ரிக்குகளுடன் சேர்க்கப்படுகின்றனர்'' (ஹுஜ்ஜதுல்லாஹில் பாலிகா 250-ம் பக்கம்)

முஸ்லிம் நண்பர்களே! எவ்வளவு யோசிக்க வேண்டிய ஸ்தலமாக விருக்கின்றது!! மானிடர்கள் இஸ்லாமைத் தழுவி, தொழுவது, நோன்பு நோற்பது, ஜகாத்து கொடுப்பது, இன்னம் மற்றுமுண்டான எல்லா ஏவல்களை யெடுத்து, விலக்கலை தவிர்த்து நடந்து கொண்டு, ஹஜ்ஜை நிறைவேற்றுவதற்கான எல்லா வசதிகளையும் பெற்றிருப்பதோடு, ஹஜ்ஜை நிறைவேற்றாது விடுபவன் அதிபெரும் தேவ தண்டனைக் குட்படுகின்றான்!

ஸஹாபாக்கள் ரலியல்லாஹு அன்ஹும் அவர்கள் ஹஜ்ஜை நிறைவேற்றாது விடுபவர்கள் விஷயமாய் மொழிந்தவைகளை, அல்லாமா ஸுயூதீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் வரைந்திருப்பதாவது:—

(1) ''ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ''ஏவலாளிகளைப் பட்டணம் பட்டணமாக அனுப்பி, எவன் ஹஜ்ஜு செய்வதற்கான எல்லா வசதிகளையும் பெற்றிருக்கும் நிலைமையில், ஹஜ்ஜை நிறைவேற்றாது விட்டுவிடுகிறானோ அவனைக்கண்டு பிடித்து, அவர்களுக்கு ஜஸ்யா (முஸ்லிம் தேசத்திலிருக்கும் பிற மதஸ்தர்களுக்கு விதிக்கப்படும்) வரியை விதிக்க நாடுகிறேன். ஏனெனின், இவர் (எல்லா வசதிகளு மிருக்க ஹஜ்ஜு செய்யா திருப்பவர்)கள் முஸ்லிம்களல்ல'' என மொழிந்திருக்கிறார்கள்.

(2) ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ''நாங் (முஸ்லிம்)கள் தொழாதவர்களையும், ஜகாத்து கொடுக்காதவர்களையும் வெட்டுவதுபோல், ஹஜ்ஜு செய்யாதவர்களை வெட்டுவேன்'' என மொழிந்திருக்கிறார்கள்.

(3) அப்துல்லாஹி இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் ''ஐசுவரியமுடையவன் ஹஜ்ஜு செய்யாமல் இறந்து போவானாயின், அவனின் இரு நேத்திரத்திற்கிடையில் ''காபர்'' என எழுதப்படுவான் என்று மொழிந்திருக்கிறார்கள். இப்னு அபீ ஷீபா அவர்கள் ''எவன் ஐசுவரிய முடையவனாக விருக்கும் நிலைமையில் ஹஜ்ஜு செய்யாமல் இறந்துபோய் விடுகிறானோ, அவனுடைய இரு கண்களுக்கு மிடையின் புருவத்தில் ''காபர்'' என்று எழுதப்பட்டவ

ருகை கியாமத்து நாளில் வருவான்" என ரிவாயத்து செய்திருக்கிறார்கள்.

(4) ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் "எவ்வருடத்தில் ஜனங்கள் ஒருவர்கூட ஹஜ்ஜு செய்யாது இருந்து விடுகின்றனரோ, அதன்பின் அவர்களுக்கு சௌகாசம் அளிக்கப்படமாட்டார்கள்" என மொழிந்திருக்கிறார்கள். (தார்மன்ஷூர் 2-ம் பாகம், 56-ம் பக்கம்.) இவ்வாசகத்தை கஷ்ஷாபும், நீஷாபூரியும் ஹஜ்ரத் உமரிப்னுல் கத்தாபு ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மூலமாய் எடுத்தெழுதி யிருக்கிறார்கள். ஆனால், நீஷாபூரி அவர்கள் "சக்தி யுடையவர்கள் ஹஜ்ஜு செய்யாவிட்டால் அவர்கள் பேரில் அதி சீக்கிறமாக வேதனையை யனுப்பப்படுவார்கள். அல்லது வேருடன் களையப் (நாசமாக்கப்) படுவார்கள்" என மேற்கூறிய நான்காம் வாசகத்திற்கு விரித்துரை செய்திருக்கிறார்கள். (காரயிபுல் குர்ஆன் அலீ ஹாமிஷ்ஷித் திப்ரீ 4-ம் பாகம், 20-ம் பக்கம்.)

மஸ்ஜிதும், ராஜீயப் பிரசங்கமும்.

(மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது.)

(190-வது பக்கத் தொடர்ச்சி.)

"அல்லாஹுதஆலாவின் மஸ்ஜிதுகளைச் செழிக்கச் செய்வோர், அல்லாஹுதஆலாவின் பேரிலும், கூலிகொடுக்கும் நாளின் பேரிலும் ஈமான்கொண்டு, தொழுகையை நிலை நிறுத்தி, ஜகாத்தை கொடுத்து, அல்லாஹ் அல்லாதவைகளைத் தவிர்த்து, அல்லாஹுதஆலாவுக்கு மட்டும் பயப்படுகிறவரேயாகும். சந்தேகமின்றி இத்தகையோர் நேரான வழியைப்பெற்று சமீபத்தில் ஜயமடைவார்கள்." (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

மக்காவின் முஷ்ரிக்குகள் கஃபாவை பரிபாலித்து அதன் சொந்தக்காரர்களாயிருப்பதாகக்கூறி, அதையொட்டி பெருமை பாராட்டியதோடு இவ்வரிய ஊழியத்தைக் காட்டினும், வேறு சிரேஷ்டமான பாக்கிய மெதுவும் உண்டா? யென்று கூறிவந்ததை மறுத்து, மேற்கூறப்பட்டுள்ள வியாக்கியானத்தைச் சார்ந்த ஆயத்தை அல்லாஹுதஆலா அருளினானென்று பல பெரியோர் பகர்ந்துள்ளார். ஆகவே, மஸ்ஜிதுகளைக் கட்டி, அதை பரிபாலிப்பதன் மூலமாய் நன்மையை

அடைவதற்கு அவசியமான நிபந்தனைகளை யெடுத்துக்காட்டி, இவை யன்றி மஸ்ஜிதைப் பரிபாலிப்பதாய்ச் சொல்லிக்கொள்ளுவதால் மட்டும் பயனடைய முடியாதென்று அல்லாஹுத ஆலா அறிவுறுத்துவதாகத் தெரிகிறது. "மக்காவின் குறைஷிகள் தாங்கள் "ஹரம்" என்னும் பரிசுத்த ஸ்தலத்தில் வசிப்பவர்களென்றும், "மஸ்ஜிதே ஹராம்" என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தைச் செழிக்கச் செய்கிறவர்களென்றும். ஹஜ்ஜாஜி என்னும் உத்தம யாத்ரீகர் களுக்குத் தண்ணீர் புகட்டுகிறவர்களென்றும்,(ஆதலின்) தங்களைக் காட்டினும் சிறந்தவர் கிடையாதென்றும் கூறிவந்ததை அல்லாஹுத ஆலா மறுத்திருப்பதாவது :—அல்லாஹுத ஆலாவின் " மஸ்ஜிதுகளைச் செழிக்கச் செய்வோர் அல்லாஹுத ஆலாவின் பேரில் ஈமான் கொண்டிருப்பவர்கள் தான். ஆகவே, ஈமான் கொள்ளாதவர்கள் கஃபாவின் முத்தவல்லியாயிருப்பதால் எத்தகைய பலனும் உண்டா ? என்பதே. (இவ்வாறு 'இப்னு இஸ்ஹாக்' கூறியதாய் 'இப்னுஹமீத்' ரிவாயத்து செய்திருப்பதாக இமாம்திப்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வரைந்திருக்கின்றார்கள்.)

'பத்ர்' சண்டையில் ஹஜ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கைதி செய்யப்பட்டு வந்திருந்தபோது, முஸ்லிம்கள் ஹஜ்ரத் அவர்களைச் சந்தித்து அவர்களின் 'குப்ர்', இரக்கமற்ற செய்கை முதலியவைகளை யொட்டி நிந்தித்தார்கள். (அன்றியும்,) ஹஜ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நோக்கி ஹஜ்ரத் "அலீ" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "குப்ர், ஷிர்க்கு ஆகிய இச் செய்கைகளோடு ஏதேனும் உங்களிடம் நற்காரியங்களுண்டா ? என்று கேட்டதற்கு, "அப்பாஸ்" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எங்களிடம் நற்செய்கைகளில்லையா ? நாங்களே மஸ்ஜிதை செழிக்கச் செய்கிறவர்களாயும், கஃபாவை பரிபாலனம் செய்கிறவர்களாயு மிருப்பதோடு, ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுகின்றோம் ; இதைக் காட்டினும் வேறு நற்செய்கை என்ன விருக்கிறது ?" என்று கூறியதை யொட்டி குறிப்பிட்டு, அல்லாஹுத ஆலா மேற்கூறிய திருமறையை இறக்கி வைத்தான் என்றும் சில முபஸ்ஸிரீன்கள் கூறி இருக்கின்றனர்.

மக்காவின் முஷ்ரிக்குகள் 'குப்ர்' 'ஷிர்க்கு' ஆகியவைகளைச் சார்ந்த துர்க்கிருத்தியங்களைப் புரிந்து வந்ததோடு, மஸ்ஜிதின் ஊழியம், பரிபாலனம் ஆகியவைகளைத் தங்கள் வகுப்பினர்களே செய்வதாகக் கூறி பெருமை பாராட்டிவந்ததோடு, "இவ்வரிய ஊழியத்தை புரிந்து வருமெங்களுக்கு, வேறு நற்செய்கைகளைச் செய்யவேண்டு

மென்ற அவசியமேது? சிரேஷ்டமான இத்தொண்டிற்கு நிகரான நற்காரியம் வேறு எதுவு மிருக்கமுடியுமா?'' வென்று அம்முஷ்ரிக்குகள் பகருவது வழக்கம். ஆனால்,மக்காவிலிருந்து வந்த முஷ்ரிக்குகளின் இவ்வெண்ணம் தப்பானதென்று அல்லாஹுதஆலா எடுத்துக் காட்டி, "கஃபா" வை பாதுகாத்து ஊழியம் புரிவதுமட்டும் அங்கீகரிக்கத்தக்க நற்காரியமல்லவென்று அல்லாஹுதஆலா இத்திருமறையின் மூலமாய் அறிவுறுத்துகின்றான். ஒரு கட்டடத்தின் காவற்காரனும், ஊழியனுமிருப்பதால் ஹிருதயமும், ஆத்மாவும் அடையக்கூடிய நன்மையாது? ஹிருதயமே பரிசுத்தமாக இருக்க வேண்டிய இல்லமும் கீர்த்திக்குப் பிறப்பிடமுமாகும். ஆதலின், ஹிருதயத்திற் கவசியமான லக்ஷணங்களை யடையாத ஹிருதயம் அதை அடைகிறவரை, வேறு எக்காரியத்தின் மூலமாயும் கீர்த்தியை எய்த முடியாது. மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருக்கவேண்டியவர் முறையே கொண்டிருக்கவேண்டிய லக்ஷணங்கள் நான்காகும். அவையாவன:—

(1) அல்லாஹுதஆலாவின் பேரில் ஈமான் கொண்டிருப்பதோடு, கூலிகொடுக்கும் நாள் உண்டென்னும் உறுதியைக் கொண்டிருப்பது.

(2) தொழுகையை நிலை நிறுத்துவது.

(3) ஜகாத்தை நிறைவேற்றுவது.

(4) அல்லாஹுதஆலாவை தவிர மற்ற எச்சக்திக்கும், ஸ்தாபனத்திற்கும் அஞ்சாதிருப்பது.

மஸ்ஜிதுகளைக் கட்டுவது, பரிபாலிப்பது ஆகிய வேலையைச் செய்வோருக்கு மேற்கூறப்பட்டுள்ள நான்கு இலக்ஷணங்களும், அவசியமான நான்கு நிபந்தனைகள்போல் அல்லாஹுதஆலா விளக்கியுள்ளான்.

"மஸ்ஜிது" அல்லாஹுதஆலாவை வணங்குவதற்குரிய இல்லமாகவிருக்கும் நிலைமையில், இஸ்லாமிய கொள்கை, செய்கை ஆகியவைகளில் சம்பந்த மில்லாதோர் அம்மஸ்ஜிதைச் செழிக்கச் செய்கிறவராயும், பரிபாலிப்பவராயும், அதன் முத்தவல்லியாயுமிருக்க எவ்வாறு சாத்தியப்படும்?

இந்நான்கு நிபந்தனைகளுள் கடைசியாயுள்ள நிபந்தனை எல்லாவற்றிலும் மிக முக்கியமான தாகும். ஆனது பற்றியே, இந்நிபந்தனையை எல்லா நிபந்தனைகளுக்கும் இறுதியாக வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்நிபந்தனை அல்லாஹுதஆலாவின் பேரில் கொண்டுள்ள ஈமானின் சாரமும், இஸ்லாமிய உண்மையின் அடிப்படையு

மாகும். அல்லாஹுத ஆலாவைத் தவிர, மற்றவைகளுக்கு அஞ்சாமல் அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் பயப்படுகிற ஹிருதயமே அல்லாஹுத ஆலாவின் பேரில் ஈமான் கொண்ட ஹிருதயமாகும்.

அல்லாஹ் அல்லாதவைகள் பெற்றிருக்கக் கூடிய இயற்கையான சக்தியைக் காட்டினும், அவை அதிக பலத்தைக் கொண்டிருப்பதாக வுள்ள தீய கொள்கை, எதிரிகளின் வன்மை, குப்ரின் ஆர்பாட்டம், வழிகேட்டின் செல்வாக்கு, கிரீடம் சிம்மாசனம் ஆகியவைகளின் ஏமாற்றம் முதலிய எதுவும் மிரட்டமுடியாத ஹிருதயமே மூமினின் ஹிருதயமாகும். உலகத்தையொட்டிய, சிக்ஷை உலக சம்பந்தமான நற்கூலி ஆகியவைகளைச் சார்ந்த எச்சரிக்கை, அல்லது ஆசை வார்த்தை முதலிய எதுவும் மூமினுடைய ஹிருதயத்தை யசைக்க முடியாது. ஒரு ஹிருதயம் அல்லாஹுத ஆலாவுக்கு எவ்வளவு பயப்படுமோ, அவ்வளவே அந்த ஹிருதயம் அல்லாஹுத ஆலாவைத் தவிர மற்றவைகளை யொட்டி அச்சமற்றதாக விருக்கும்.

தன் எதிரிகளின் எக்கொடிய அகங்காரத்தை இஸ்லாம் மறுத்திருக்கின்றதோ? அக்கொடிய அகங்காரம், இருளடர்ந்த வழிகேடு, "குப்ர்" சூழ்ந்த பெருமை ஆகியவைகளில் சிக்குண்டிருப்போர் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர்களெனக் கூறிக்கொள்வது ஆச்சரியமல்லவா? கஃபாவை பரிபாலிப்பது, மஸ்ஜிதுகளைச் செழிக்கச் செய்வது முதலிய நற்காரியங்களைப் புரிகிறவர்களென மக்காவின் முஷ்ரிக்குகள் கூறிவந்தனர், ஆகவே, இக்கூற்றை அல்லாஹுத ஆலாவின் திருவசனம் மறுத்து பொய்யாக்கினதுபோல், மக்கா தேசத்து முஷ்ரிக்குகளின் தேசசம்பந்த மில்லாத சந்ததிகள் இன்று தங்களை முஸ்லிம்களென்றும், ஈமான் கொண்டிருப்போர்க ளென்றும் அழைத்துக் கொண்டாலுங்கூட, அத்திருவசனம் இத்தகையோரையும் கண்டிக்கும் காலம் வந்து விட்டது. ("கஃபாவை" பரிபாலனம் செய்பவரென்று பெருமை பாராட்டிக் கொண்டிருந்த மக்காதேசத்து முஷ்ரிக்குகளின் கூற்றை மறுக்கப்பட்டிருக்கும்,) இவ்வரிய திருமறையை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, இன்று மஸ்ஜிதுகளைப் பரிபாலனஞ் செய்துவருவோரின் நிலைமையை நோக்குவோமாயின், இது பெருங் கவலையாயும், அளவற்ற விசனத்தை மூட்டக்கூடியதாயும் இருந்து வருகிறதல்லவா?

அல்லாஹுத ஆலாவின் பேரிலும், கூலி கொடுக்கும் நாளின் பேரிலும் ஈமான் கொண்டிருப்பதாய்க் கூறுவதை மெய்ப்பிக்கும் தொழுகையை நிலை நிறுத்தி, ஜகாத்தைக் கொடுத்துவருவதோடு தன் சொற்செயல், நடையுடை பாவனை முதலிய சகலகாரியங்களிலும்

அல்லாஹ், அல்லாதவைகளுக்கு அச்சமற்றிருப்பவரே மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருக்கமுடியுமென்று இவ்வரிய திருமொழி நமக் கறிவுறுத்துகின்றது. மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருப்பவரை அல்லாஹ் அல்லாத எச்சக்தியும் பயமுறுத்தாம லிருக்கவேண்டும்; எப்பெரும் ஸ்தாபனத்திற்கும், அதன் செல்வாக்கு, பலம், பெருமை ஆகியவைகளுக்கும் மஸ்ஜிதுகளின் முத்தவல்லி அஞ்சாதவராகஇருத் தல் வேண்டுமென்றும் இத்திருமறை போதிக்கின்றது. உண்மை இவ்வாறிருக்க ஈமானின் குறிப்பான இந்த லக்ஷணங்களில் எதையும் பெற்றிராத சங்கங்கள், இமாம்கள், நாட்டாமைக்காரர்கள் முதலி யோர் மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயும், அல்லாஹுதஆலாவுக் குச் சொந்தமான வீட்டின் காவல்கார்ர்களாயுமிருக்க என்ன பாத் திய முண்டு?

அல்லாஹுதஆலாவுக்கு மாறு செய்யும் அகம்படைத்த முத்த வல்லிகள், முற்றிலும் மக்காவின் முஷ்ரிக்குகளைப் போல் இன்று மஸ் ஜிதுகளின் முத்தவல்லிகளாயும், காவற்காரர்களாயும் இருப்பதை யொட்டி "குப்ர்" நிறைந்த முறையில் தங்களைப் பாராட்டிக் கொள் ளும் ஸ்திதியில் இவர்கள் இத்திருமறையின் மூலமாய் கண்டிக்கப் படு கிறார்களல்லவா? மஸ்ஜிதுகளின் மானிபச் சொத்துக்களைத் தங்களின் உலகசம்பந்தமான யெண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் கருவி யாயும், தங்கள் ஷைத்தானிய இன்ப சுகத்தை அனுபவிப்பதற்குத் துணையாயும் செய்துகொள்ளக் கருதி, மஸ்ஜிதுகளைத் தங்களின் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டு, இவ்வாறு மஸ்ஜிதுகளைத் தங்கள் செல்வாக்குக் குட்படுத்தி யிருப்பதற்கான பாத்தியம் தங்களுக் குண்டென்பதை வெளியிடுவதற்கு எச்சந்தர்ப்பத்திலும் தயாராயிருக் கின்ற முத்தவல்லிகள் எண்ணிறந்து இருக்கவில்லையா?

இவர்கள் எம் மஸ்ஜிதுகளின் முத்தவல்லியாக இருக்க தங்க ளுக்கு உரிமை உண்டென்று கருதுகின்றனரோ! அம்மஸ்ஜிதுகளின் (ஷைத்தானின் அடிமைகளான) இம் முத்தவல்லிகள் ஐந்து நேரத் தொழுகையை தொழவேண்டுமென்னும் அருளைக்கூடப் பெற்றிருக்க வில்லை. இக்கொடிய முத்தவல்லிகளின் பரிபாலனத்திற் குட்பட் டிருக்கும் மஸ்ஜிதுகளில், அல்லாஹுதஆலாவின் அடிமைகள் அணிவகுத்து, அவனின் சமுகத்தில் தலைவணங்கி, அவனைப் புகழ்ந்து துதிப்பதில் கவனம் செலுத்தியிருக்கும்போது, இவர்கள் (பாதகச் செய்கைகளின் உற்பத்தி ஸ்தானமாகிய) தங்களி னில்லங் களில் தீச்செயல்களைப் புரிந்து, இன்பமுறுவதில் காலங்கழிக் கின்றனர்.

துக்கொண்டவனுமே அல்லாஹுத ஆலாவின் வீட்டைப் பரிபாலனம் செய்பவனுவான். ஒரு அடிமை இரண்டு எஜமானரைச் சந்தோஷப் படுத்தி வைக்க முடியாதென்று (மஸீஹ்) கூறியுள்ளார்கள். ஆனால், குர்ஆன் ஷரீபு இதைக் காட்டினும் தெளிவான உதாரணத்தைத் தருகின்றது. "அல்லாஹுத ஆலா எந்த மனிதனுடைய பாரிசத்திலும் இரண்டு ஹிருதயங்களை வைக்கவில்லை. (ஒவ்வொரு மனிதனுக்கும்) ஹிருதயமொன்றே." (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

உங்களிடம் ஒரே ஹிருதய மிருக்குமாயின் உங்கள்சிரசு இரண்டு வாயல்களில் பணியமுடியாது. நீங்கள் ஒரே ஹிருதயத்தை யுடையோர்களாயின் நீங்கள் இரண்டு எஜமானர்களின் அடிமைகளாக விருக்கமுடியாது. நீங்கள் அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் சொந்தமான அடிமையாக இருக்கலாம்; அல்லது அல்லாஹ் அல்லாதவைகளின் உடைமையாயிருக்கக்கூடும். நீங்கள் அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் உரியவர்களாக விருந்தால், அல்லாஹ் அல்லாதவைகளுக்கு அஞ்சி அவைகளின் முன் ஏன் உங்கள் சிரசை வணங்கச் செய்கிறீர்கள்? அல்லாஹுத ஆலாவின் உத்திரவை ஏற்று நடந்து கொள்ளாவிடின் பாவம் உண்டு என்பது திண்ணம். ஆனால், அல்லாஹுத ஆலாவின் உத்திரவை மீறுவது குப்ர் அல்லவா? அல்லாஹ் அல்லாதவைகளுக் கஞ்சி நீங்கள் அவைகளின் அடிமைகளாயிருந்து அழிந்துபோக இஷ்டப்பட்டீர்களானால், உங்களை யெவரும் ஆக்ஷேபிக்காதிருக்கலாம். ஆனால், அல்லாஹ் அல்லாதவைகளின் அடிமைகளாக யிருந்து கொண்டு, அல்லாஹுத ஆலாவுக்குரிய வீட்டின் தொண்டரென ஏன் பிதற்று கின்றீர்கள்?

அல்லாஹுத ஆலாவின் பேரில் (1) ஈமான் கொண்டு, (2) தொழுகையை நிலைநிறுத்தி, (3) ஜகாத்தை கொடுப்பதோடு, (4) ஈமானின் பஹிரங்கமான இலட்சணமாகிய அல்லாஹ் அல்லாதவைகளைத் தவிர்த்து, அல்லாஹுதஆலாவுக்கு மட்டும் பயப்படுகிறவரே அல்லாஹுத ஆலாவின் மஸ்ஜிதுகளுக்கு முத்தவல்லியாக இருக்க யோக்கியதை உள்ளவர்களென்று, இவ்வரிய திருமறை மிகத்தெளிவாய் எடுத்துக் காட்டுகின்றது. இந்நான்கு இலட்சணங்களும் ஒருங்கே அமையப் பெருத எவரும் அல்லாஹுதஆலவின் மஸ்ஜிதுகளுக்கு முத்தவல்லிகளென்னும் சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு, மஸ்ஜிதுகளின் கீர்த்தியைக் கெடுக்கும் வடுக்களாக இருப்பது நியாயமா?

மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயிருக்க யோக்யதை இல்லாதவர்கள், மஸ்ஜிதுகளுக்கு முத்தவல்லிகளா யிருக்குமிடங்களில் இத்

தீயவர்களிடமிருந்து, மஸ்ஜிதை மீட்டுக்கொள்ளவது ஒவ்வொரு முஸ்லிமுடையவும் மதக்கடமையாகும். மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயிருக்க யோக்கியதை இல்லாதவர்களிடமிருந்து மஸ்ஜிதைமீட்டு, உத்தமர்களிடம் ஒப்புவிக்கவேண்டிய பொறுப்பு அல்லாஹுதஆலாவின் வழிபாட்டில் புரியும் சத்தியப் பிரசாரமாகும். ஆதலின், இக்காரியத்தை நல்லனவற்றை ஏவி, கெடுதியை யகற்றுவதென்னும் ஊழியமாகிய வேலை திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். உண்மையான மூமின்களாயும், நற்கருமங்களைப் புரியும் உத்தமர்களாயும், அல்லாஹுதஆலாவுக்கு மட்டும் பயப்படுகிறவர்களாயும், ஈமானுக்குரிய இலட்சணங்களை யுடையோர்களாயு மிருப்பவர்களே மஸ்ஜிதுகளின் முத்தவல்லிகளாயிருப்பது பொருந்தும். (தொடரும்)

ராபிஅதுல் அதவியா.

ஒரு முஸ்லிம் பக்த சிரோமணி.

[ஸ்ரீமான். டி. எஸ். அவிநாசிலிங்கம் எழுதியது.]

ராபி அதுல் அதவியா என்னும் மாதரசியார் ஆசியாமைனர் என்னும் தேசத்தைச் சேர்ந்தவர். முகம்மதிய மதத்தில் இறைவனை வழிபட்டு ஆத்மாநுபூதி யடைந்த பெரியார்களில் ஒருவர். பஸ்ரா என்னும் நகரத்தில் மிக எளிய குடும்பத்தில் அவர் பிறந்தார். அவ்வூரில் ஏற்பட்ட பஞ்சத்தின் கொடுமையைப் பொறுக்க மாட்டாமல், அவர் தாய் தந்தையர் சில பொன் காசுகளுக்காக அவரை ஒருவனிடம் விற்றுச் சென்றனர். ராபிஆவை விலைக்கு வாங்கினவன் அவருக்குப் பல கொடுமைகள் செய்து வந்தான். அவன், இரக்கம், அன்பு, பச்சாத்தாபம் முதலிய நற்குணங்கள் சிறிதும் பொருந்தாத கல் நெஞ்சன். அவருடைய உடம்பின் நிலையையும் பலவீனத்தையும் கவனியாது மிகக்கடினமான வேலைகளையும் செய்யும்படி ஏவிவந்தான். ஆனால், அப்பெண்மணி யாவும் ஆண்டவனிட்ட கட்டளையே என நினைத்து, அவனது திருவடியே கதியெனத் தேறி, அனுதினமும் பகவானைத் தொழுது தன் எஜமானனிட்ட கருமங்கள் யாவையும் பொறுமையுடனும் பணிவுடனும் செய்து வந்தார். கடின வேலைகளால் கஷ்டங்கள் அதிக மேற்பட்டன. அக்கஷ்ட காலத்திலும்

இறைவனடியை மறவாமல்; ஆயாசமும் சந்தேகமும் கொள்ளாமல், சிரத்தை யுடனும் பக்தியுடனும் வாழ்ந்து வந்தார். ஒருநாள் ஓர் அன்னியனுடைய துர்ப்பார்வையினின்றும் விலக எண்ணி அவசரமாய் நடக்க முயன்றார். அப்பொழுது கால் தவறிக் கீழே விழுந்து விட்டார். விழவே, ஒரு கையில் பலமாக அடிபட்டு மணிக்கட்டின் நிலை தவறியது. எழமுடியாது தரையிலேயே படுத்துக் கொண்டு மிக்க வேதனைப் பட்டுக் கொண்டிருந்த அத்தருணத்திலும், அவருடைய பரிசுத்தமான இதயம், கேவலம் இத்தூல தேகத்தினிடம் செல்லாது, திருவருளையே நாடிச் சென்றது. அப்பொழுது அவர் பிரார்த்தனை செய்ததாவது: "ஹே பிரபு! நானோ ஓர் அடிமை; திக்கற்றவள் ; உன்னைத் தவிர வேறே ஆதரவு இல்லாதவள் ; சுயேச்சையும் சுதந்திரமும் இல்லாதவள். எனது கை மணிக்கட்டும் அடியுண்டு மிகுந்த வேதனையைத் தருகின்றது. ஆனால் இவை யொன்றும் என் மனதைப் பாதிக்கவில்லை. ஒரே ஒரு எண்ணம் தான் என்னை இரவும் பகலும் துன்புறுத்துகின்றது. அதாவது நான் உமது திருவாக்கைப் பின்பற்றி, அதன்படி என் வாழ்க்கையைச் சீர்திருத்தி வாழ்கின்றேனோ, இல்லையோ என்னும் சந்தேகமே.

* * * *

அயலானுக்குட்பட்ட அடிமையாக விருந்ததினால் ஆண்டவனுக்குத் தொண்டுகள் பல செய்ய இயலாமற் போனதைப் பற்றிச் சதா நினைந்து அம்மாதரசி துக்கப்பட்டார். ஓர் இரவு அதே நினைவில் மூழ்கி ஆறாத்துயரடைந்தார். வாழ் நாள் முழுதும் அவனது திருத்தொண்டுகளிலேயே கழிக்க முடியாதிருந்ததை எண்ணி விம்மி விம்மி அழத் தொடங்கினார். தாம் இருக்கும் இடத்தையும் தாம் சொல்லும் வார்த்தைகளை மற்றவர்கள் கேட்கநேரிடும் என்பதையும் அறியாமல், வாய்விட்டு பகவானை நோக்கிப் பிரலாபிக்கலானார். " ஓ ! ஈஸ்வரா ஏன் என்னை இப்பந்தத்தில் இருத்திக் கஷ்டப் படுத்துகிறாய் ? எனக்குச் சுதந்திரம் மாத்திரம் அளிப்பாயானால், ஒவ்வொரு நிமிடமும் நினது சேவையிலேயே ஈடுபட்டிருப்பேனே." இன்னும் இம்மாதிரிப் பல வார்த்தைகள் கூறி மிகப் பரிதபித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஏதோ அகஸ்மாத்தாய் விழித்துக் கொண்டிருந்த அவருடைய எஜமானன், இவ்வார்த்தைகளைக் கேட்டு, அவரது உண்மை நிலைமை நன்கு உணர்ந்து, தான் அவரைக் கடுமையாய் நடத்தியதற்காக வெட்கி, விசனமுற்று, அன்றே அவரைத் தன் வேலைகளினின்றும் விடுவித்து, எங்கும் போகவும் ஏதுஞ் செய்யவும் சுதந்திரம் அளித்தனுப்பினன். இப்படி

விடுவிக்கப் பட்டதற்குத் திருவருளே காரணமெனத் தேர்ந்து, ஆயுள் பரியந்தமும் அவனது திருப்பணிகளைச் செய்வதிலேயே வாழ்நாளைக் கழிக்க எண்ணி, ஆண்டவன் திருவடியை நினைந்தும் பணிந்தும், போற்றியும், பூஜித்தும்வந்தார். மெக்கா, மெடினு, முதலிய பெயர்பெற்ற புண்ணிய க்ஷேத்திரங்களைப் போய்த் தரிசித்து வந்தார். ஒருக்ஷண மும் வீணுக்காமல், ஈஸ்வர சிந்தையிலேயே சதா காலமும் மனதைச் செலுத்தி வந்தார். இரவு முழுதும் தியானத்திலாழ்ந்திருந்து, அதி காலையில் படுக்கைக்குச் சென்று, மிகச் சொற்பகாலமே உறங்குவார். அதி சீக்கிரத்திலேயே துயில் கழித்து எழும்பொழுதும் "மனமே! எத்தனை நேரம் உறங்குவாய்? உறங்கி, உறங்கி யாது கண்டாய்? இப் படியே வாழ்நாளை வீணுளாக்க நினைந்தாயோ? எழவொண்ணுத் தூக் கத்தில் விழும் காலம் ஒவ்வொரு நிமிடமும் நெருங்குகின்றது. ஆத லால் இச்சமயம் துயிலை விட்டெழுந்து, இம்மையிலும் மறுமையிலும் பயன் தரக் கூடிய விஷயங்களில் கருத்தைச் செலுத்து" எனக் கதறு வார்.

* * * *

இங்ஙனம் நாள்தோறும் ஈஸ்வரபக்தி நிறைந்து, யான் எனது என்பனவற்று, சகல பாசபந்தங்களையும் அறுத்து யாவும் அவனு டைய அருளே எனப் போற்றிவந்தார். உணவு உடை முதலிய இத்தூல தேகத்தின் தேவைகளையும் பொருட்படுத்தாமல், இப்பிர பஞ்ச சிந்தனையை அறவேயகற்றி, பகவானுடைய திருநாமங்களை ஜபிப்பதிலும், அவனது பெருமைகளைப் பற்றி நினைப்பதிலும் அவ னுடைய சர்வஞ்ஞத்தை வியந்து பாடுவதிலுமே சதாகாலமும் கழித்து வந்தார். எவ்விதமான துன்பங்கள் நேரிட்டபோதிலும், தம் நிலை கலங்காது, ஆண்டவனிடத்திலேயே முழுமனதையும் செலுத்தி வந்தார். அவரைப்பற்றிக் கேள்வியுற்ற பெரியார் சிலர் ஒருநாள் அவரைப் பார்க்க வந்திருந்தார்கள்; அவருடைய உடம்பின் மிக்க கேவலமான ஸ்திதியைக்கண்டு பரிதபித்து "அம்மா நினது கஷ்டங்களை நிவர்த்திக்கும் வண்ணம் பிரார்த்தனை செய்யலாகாதா?" என்ருர்கள். அம்மையார் "இக்கஷ்டங்களை உண்டாக்கியது யார்?" என்று வினவினுர். அவர்கள் ஆண்டவன்தான் என்றனர். அதற் கவர் "அவனது விருப்பத்தாலேயே இவை ஏற்பட்டனவென்ருல், எப்படி அதற்கு மாருக நான் அவற்றைப் போக்கும்படி பிரார்த்தனை செய்வது?" என்ருர். இதைக் கேட்ட யாவரும் இவருடைய பக்தி யின் உன்னத நிலையையறிந்து, வியந்து சென்ருர்கள். விஷய சுகங் களிலும், லௌகிக விஷயங்களிலும் கிஞ்சித்தும் மனத்தைச் செலுத்

தாது, பலநாட்கள், வாரங்கள், மாதங்கள் வரையிலுங் கூட இல்லத்தைவிட்டு வெளிவராது, ஆன்மார்த்தமான ஸாதனைகளைச் செய்துவந்தார். ஒரு முறை வெகு நாட்களாக வெளியே வராமல் வீட்டுக்குள்ளேயே இருந்துவந்த அவரை நோக்கி ஒருவன் "தாயே, வீட்டைவிட்டு வெளிவந்து பிரபஞ்சத்தின் இயற்கையழகைப் பாருங்கள்! எத்துணை யாச்சர்யமாகவும், அழகாகவும் கம்பீர மாகவும் இருக்கின்றது. பகவானுடைய பெருமையை எவ்வளவு தெளிவாக விளக்கிக் காட்டுகின்றது!" என்றான். அதற்கவர் "உனக்குள்ளேயே உற்றுப் பார். அங்கு இன்னு மதிகமான இன்பமும் அழகும் பொருந்திய அரும் பெரும் விஷயங்களைக் காண்பாய்! அவை வெளிப்பிரபஞ்சப் பொருள்களை விட மிக அதிகமாய் இறைவனுடைய பெருமையை விளங்கச் செய்யும்" என்றார்.

* * * *

உணவருந்தாமலும், உறக்கம் இல்லாமலும், அவர் பல விரதங்களை அனுஷ்டித்துவந்தார். ஒரு சமயம் ஏழு நாட்கள் ஊண் இன்றி பகவத்தியானம் செய்து கொண்டிருந்தார். அவ்வேழுநாட்களுக்குப் பின் உடம்பு மிகவும் மெலிந்த நிலையில் இருப்பதைக் கண்டு, விரதத்தை விடுத்து உணவருந்த எண்ணினார். அவர் விளக்கேற்றப் போயிருந்த சமயம் ஒரு பூனை வந்து, உண்ணவைத்திருந்த பண்டத்தைத் தின்று விட்டது. பிறகு கொஞ்சம் நீராவது அருந்த எண்ணினார். ஆனால் விளக்கு அணைந்து போயிற்று. இதனால் மிகவும் வருத்தமுற்றுக் கடவுளை நோக்கி "ஆண்டவனே! ஏன் என்னை இத்துன்பங்களுக்கு ஆளாக்குகிறாய். இவற்றை யனுபவிக்க, நான் என்ன பாவம் செய்தேன்" என முறையிட்டார். அப்பொழுது ஓர் அசரீரி 'ஓ ராபிஆ உனக்கு இவ்வுலகம் முழுமையும் வேண்டுமானால் கொடுக்கிறேன்; ஆனால், அதன் பயனாக என் பேரில் கொண்டிருக்கும் பேரன்பையும், பக்தியையும் நீ இழந்து விடுவாய். ஈஸ்வரபக்தியும், உலகப்பற்றுதலும் ஒன்றோடொன்று இணைந்து ஒருகாலும் இருக்க முடியாதென்பதை நிச்சயமாய் அறிவாயாக" என்று சொல்லக்கேட்டார். அன்று முதல், தம்மையறியாமலே இருந்த பாசங்கள் யாவும் அடியோடு நீங்கப் பெற்று இடையீடில்லாது கடவுள் சிந்தனை செய்து வந்தார். அப்பொழுது அவர் இறைவனை வேண்டிக்கொண்டதாவது, "ஆண்டவனே! எந்நேரத்திலும் எவ்விடத்திலும் நீயே என்மனதை யாட்கொள்ளவேண்டும். வேறு எந்த எண்ணமும் மனதில் வராவொட்டாதபடி, உன் எண்ணத்திலேயே என் மனது மூழ்கியிருக்க வேண்டும்."

ஒருநாள் தனவந்தன் ஒருவன் ஒருபையில் பொன் நாணயங்களை நிரப்பிக் கொண்டு, அவைகளை ராபிஆவுக்குப் பரிசாகக் கொடுக்க எண்ணி, அவ்வம்மணியின் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான். இதைப் பார்த்து அங்கிருந்தோர் வீட்டினுள்ளே போய் ராபிஆவிடம் சொல்ல, அவர் "அப்பா! கடவுள் அனுதினமும் எனக்கு வேண்டிய பொருள்களைக் கொடுக்கிறார். அவனைவிட வேறு கெதி நமக்கு ஏன்? அவனருள் நமக்கிருக்க, இப்பொற் காசுகள் நமக்கு யாது பிரயோசனத்தைத் தரும்? மேலும் இப்பணம் நல்வழியில் தான் வந்ததா, அல்லது தீயவழியில் வந்ததா என்பதையும் நாம் அறியோம். அப்படியிருக்க நான் ஏன் இதை வாங்கிக் கொள்ளவேண்டும்?" என்றார். இதைக் கேட்ட அத்தனவந்தன் மிகத் துயருற்றுத் தன் வழிச் சென்றான்.

* * * *

பஸ்ராவிலிருந்து, நூல்கள் மிகக்கற்று பாண்டித்யமடைந்தவர் ஒருவர் ராபிஆவைப் பார்க்கவந்திருந்தார். அப்பொழுது அவர் மனித சுபாவத்தின் குற்றங்களைப் பற்றியும், சம்சார வாழ்க்கையிலுள்ள இச்சைகளைப் பற்றியும், அவைகளால் உண்டாகும் இக்கட்டு களைப்பற்றியும், மிக விஸ்தாரமாகவும், அதிகமாகவும் பேசிக் கொண்டிருந்தார். அதைக்கேட்டு ராபிஆ, "உமக்கு உலகப்பற்று அதிக மாக இருப்பது போல் தோன்றுகிறது! நமக்கு விருப்பமில்லாத விஷயங்களைப் பற்றி நாம் அதிகமாய்ப் பேசமாட்டோம். நீர் இவ் வுலக வாழ்க்கையைப்பற்றி இவ்வளவு அதிகமாய்ப் பேசுவதைக் கவனித்தால் உமக்கு இவ்வாழ்க்கையில் அதிக விருப்பம் உண்டென்றே சொல்லலாம்" என்றார். ஒருநாள், அக்காலத்தில் முகமதியதேசம் முழுதும் பெரியோர் எனப்பெயர் பெற்ற மூவர் ராபிஆவிடம் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். அச்சமயம் உண்மையான ஈசுவர பக்தி யென்பது யாது என்னும் கேள்வி பிறந்தது. ஒவ்வொருவரும் தத்தம் அறிவுக் கேற்றபடி விடையிறுத்தினர். ஒருவர் 'எவனொருவன் தனக்கு வரும் கஷ்ட நஷ்டங்களைச் சாந்தத்துடனும் தைரியத்துடனும் அனுபவிக்க வில்லையோ, அவன் உண்மையான ஈசுவர பக்தியுடையவனாக மாட்டான்' என்றார். இதைக்கேட்ட ராபிஆ 'இது கர்வத்தைக் காட்டுகின்றது' என்றார். மற்றொருவர் 'தனக்கு வந்த அல்லல்கள் யாவும் தனது முன்னேற்றத்திற்காகவே கடவுளால் கொடுக்கப் பட்டவை யெனநினைத்து, அவைகளுக்காகக் கடவுளுக்கு வந்தன மளிக்காதவன் உண்மை பக்தியுடைய வனாக மாட்டான்' என்றார். இன்னுமொருவர் 'தனக்கு வரும் துன்

பங்களெல்லாம் திருவருளால் ஏற்பட்டவை யென நினைத்து, சந்தோஷப் படாதவன் உண்மை பக்தியுடையவனாக மாட்டான்' என்றார். அவர்கள் சொன்னவைபாவையும் கேட்டுக் கொண்டிருந்த ராபிஆ, அதைவிட மேலான பக்தியு முண்டென்றார். அது யாதென அவர் அவர்கள் கேட்க, அவர், "பக்தியின் மேலீட்டினால் தன்னையும் தன்னை நோகச்செய்யும் அல்லல்களையும் மறந்து, இறைவனிடத்தே தனது முழுமனதையும் செலுத்தி, அதனால் 'நான்,' 'எனது' என்பனவற்று நிலைத்திருப்பவனே உண்மையான ஈசுவரபக்தி யுடையவனாவான்" என்றுரைத்தார். இதைக்கேட்ட அவர்கள் யாவரும் ராபிஆவின் முதிர்ந்த ஞானத்தையும் உயர்ந்த பக்தியையும் கண்டு ஆச்சரியமடைந்தனர்.

இவ்வண்ணம் கனிந்த ஈசுவர பக்தியும், பேரன்பும் உடையவராகி அதனால் வரும் பேரின்பமும் அடைந்து, யாவராலும் போற்றப்பட்டு இம்மாதரசியார் சிலகாலம் ஜீவித்திருந்தார். எங்கெங்குச் சென்ற போதிலும் இந்தப் பெரியாரின் வாழ்க்கை சுடர் விட்டெரியும் விளக்கு போலத் தோன்றி, மானிடர் யாவருடைய வாழ்க்கைக்கும் ஓர் இலக்கியமாக விளங்கிற்று. ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் அறவேயொழித்து, சரீர சுகங்களையும் தேவைகளையும் அணுவளவேனும் கவனியாது, பிறருக்கு நன்மை செய்வதிலும், ஆண்டவன் திருத்தொண்டுகள் செய்வதிலுமே, அவர் வாழ் நாளைக் கழித்தார். உயிர் போகும் தருணத்தில் கடைசியாக அவர் சொன்னதாவது:—ஏ! ஈசா நான் நரகத்துக்குப் பயந்து உன்னை வழிபட்டிருந்தேனானால் என்னை நரகத்திலேயே சேர். சுவர்க்கத்தை அடைய எண்ணி உன்னைத் தொழுதிருந்தேனானால் என்னை சுவர்க்கம் சேரவொட்டாமல் தடு; ஆனால், எனதன்பே! உன்னை நாடியே எனதன்பு முழுமையும் செலுத்தி யிருந்தேனானால், எனக்கு உனது திவ்ய பொற்பாத கமலங்களையும், உனது திவ்ய வதனத்தையும் காட்டி அருள்புரி."

(நவசக்தி)

சுன்னத் ஜமாஅத்து உலமாக்களின் ஏகோபித்த தீர்மானம்.

(1) அல்லாபண்டிகை ஹறாமு (விலக்கப்பட்டது)ம், கொடிய பாவமான காரியமாகும். (2) அல்லாபண்டிகை நரகம் (ஸல்) அவர்களின் வெறுப்புக்குக் காரணமாகும். (3) அல்லாபண்டிகை இஸ்லாமுக்கும், இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கும் கொடிய விரோதத்தின் பெயராகும். (4) முஹர்ரம் மாதத்தின் தீபலங்காரம், மேளம் வாசித்தல், ஊர்வலம் செய்வது போன்றவைகள் எஜீதின் நேசர்களின் செய்கையாகும். ஆகவே, சுன்னத் ஜமாஅத்து முஸ்லிம்கள் இக்கொடிய பாவத்தைவிட்டும் விலகிக் கொள்ளவேண்டியது கடமையாகும்.

ஹஜ்ஜும், முஸ்லிம் மன்னர்களும்.

(மக்கமா நகரிலிருக்கும் ஒரு மாணவர் எழுதியது.)

(181-வது பக்கத்தொடர்ச்சி.)

மஹ்தீ யிப்னு மன்ஸூர்.

அப்பாஸீச வகுப்பைச்சார்ந்த மூன்றாவது கலிபா (அபூ அப்துல் லாஹில்) மஹ்தீ அவர்கள் ஹிஜ்ரீ 160-வது வருடம் ஹஜ்ஜு செய்தார்கள். இவர் தங்கநாணயத்தில் 5,00,000 ஐந்து லக்ஷமும், வெள்ளி நாணயத்தில் 3,00,00,000 மூன்று கோடியும், உடுப்புகளில் 1,50,000 ஒரு லக்ஷத்து ஐம்பதாயிரமும் ஹரமைனைச் சார்ந்தோர்க்கு வெகுமதியாகவளித்தார்கள். இக்கலீபா அவர்கள் தன்னோடு பக்தாதிலிருந்து பனிக்கட்டி (ICE) கொண்டுவந்திருந்தார். அது மக்கமாநகர் வந்துசேருமளவுமிருந்தது.

கலீபா மஹ்தீயவர்கள் அதேவருடம் மக்காவின் பரிசுத்த ஹரமை விஸ்தீர்ணஞ் செய்யும் பொருட்டு, ஹரமுக்கு சுற்றுபக்கங்களிலுள்ள வீடுகளை (அவ்வீட்டிற்குரியவர்களிட மிருந்து, காலக்கிரயப்படி) வாங்கி, அவைகளை யிடித்து மஸ்ஜிதோடு சேர்த்துவிட்டார்கள். அவ்வீடுகளில்ஏற்கனவே மானியஞ்செய்யப்பட்டிருந்தவைகளுக்கு ஈடாக ஹரமுக்கு சற்றுதூரத்தில் வேறு வீடுகளைவாங்கி மானியஞ் செய்தார்கள். அவைகளின் நிலங்களைக் காலக்கிரயப்படி ஒரு சதுர கஜம் 25 தீனர் வீதம் வாங்கினார்கள். கட்டடங்களின் கிரயம்வேறு. "கைரத்துல் கஜாயிய்யா" வென்ற வீட்டின் மேல்கிரய மட்டும் 38 ஆயிரம் தீனர் கொடுத்து வாங்கியிருக்கிறார்களென்றால், மற்ற கட்டடங்களின் கிரயம் எவ்வளவு கொடுத்திருப்பார்கள் என்பதை நீங்களே சுலபமாய் அறிந்துக்கொள்ளலாம்.

கலீபா மஹ்தீயவர்கள் ஹிஜ்ரீ 164-வது வருடம் இரண்டாவது ஹஜ்ஜு செய்தார்கள். இந்நான்கு வருடத்திற்குள் ஹரம்ஷரீபு விஸ்தீர்ணமாகக் கட்டிமுடிந்துவிட்டது. அதை கலீபா மஹ்தீயவர்கள் பார்வையிட்டார்கள். மூன்று புறமும் விஸ்தீர்ணமாகிவிட்டது. ஆனால், தென்புறம் (ஸபாவின் திசை) ஒடுக்கமாக விருந்தது. அதனால் கஃபா ஷரீப் ஹரமின் மத்திபத்தில் இல்லை. ஆகவே கலீபாஅவர்களுக்கு மன திருப்தி யேற்படாததினால், கலீபா,

அவர்கள் தென்புறமுள்ள ஹரமையும் மற்றமூன்று பக்கங்களைப் போல் விஸ்தீர்ணம் செய்யும்படியாய் உத்திரவு பிறப்பித்தார்கள். அது போழ்து கட்டடத்தொழிலாளிகள் "இத்தென்புறம் அடிக்கடி வெள்ளம் ஏற்படுகிறது. அவ்விடத்தில் கட்டடம் கட்டினால் பலப்படாததோடு, செலவும் மிதமிஞ்சியாகுமெ"ன விண்ணப்பித்துக்கொண்டார்கள். அதற்கு கலீபா அவர்கள் "அத்தென்புற ஹரமை விஸ்தீரணஞ்செய்வதில் இராஜாங்கத்தின் பொக்கிஷ முழுவதும் செலவாகினும் காரியமில்லை" என உத்திரவு செய்தார்கள். அதன்படி தென்புறத்தை விஸ்தீரணஞ் செய்து கட்டப்பட்டதே தற்காலமுள்ள ஹரம் ஷரீபின் பிளானாகும். ஆனால், கலீபா மஹ்தீ அவர்கள் கட்டடம் முற்றுபெறு முன் மரண மடைந்து போனார்கள். எஞ்சியுள்ளதை "மூஸ்யல்ஹாதீ" என்பவர் காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டது.

கலீபா ஹாரூன் ரஷீத்.

இஸ்லாமிய கலீபாக்களுள் அதிக ஹஜ்ஜு செய்தவர் கலீபா ஹாரூன் ரஷீத் அப்பாஸீயவர்களே. அதன் வரலாறுவது:—ஹாரூன் ரஷீத் "கலீபா" பட்டத்தையடைவதற்குமுன் இருலோக ரக்ஷகர் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தரிசினத்தின் பாக்கியத்தைக் கனவில் பெற்றார். அச்சமயம் "உமக்கு கலீபா பட்டங் கிடைக்கப் போகிறது. (ஆகவே, கலீபா பட்டங் கிடைத்ததும்) ஜிஹாத் செய்யும், ஹஜ்ஜு செய்யும்; ஹரமைனைச் சார்ந்தோர்க்கு உதவி புரியும்" என நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஆக்ஞாபித்தார்கள். அதன்படி கலீபா ஹாரூன் ரஷீத் அவர்கள் கலீபா பதவியை ஏற்றுக் கொண்ட முதல்வருடமே மேற்கூறிய காரியங்களைச் செய்கையில் காட்டவாரம்பித்து, ஹிஜ்ரீ 170-வது வருடம் ரூமியர்களோடு யுத்தந் தொடுத்தார்கள்; ஹஜ்ஜும் செய்தார்கள்; இன்னும் ஹரமைனைச் சார்ந்தோர்களுக்கு அளவிறந்த இனாம்களும் அளித்தார்கள்.

கலீபா ஹாரூன் ரஷீத் அவர்கள் முதல் ஹஜ்ஜை பக்தாதிலிருந்து கால்நடையாகவே திருமக்காவிற்குச் சென்று ஹஜ்ஜு செய்தார்கள். அவர்கள் நடப்பதற்காக ஒரு மன்ஸிலி (விடுதியி) லிருந்து மற்றொரு மன்ஸில் வரைக்கும் பாதையில் மெதுவான விரிப்பு விரிக்கப்பட்டது. அந்த ஹஜ்ஜுக்குப் பின் கலீபா ஹாரூன் ரஷீத் அவர்கள் ஹிஜ்ரீ 173, 174, 175, 177, 179, 181, 186, 188, 189-வது வருடங்களில் ஒன்பது ஹஜ்ஜு செய்திருக்கிறார்கள். ஹிஜ்ரீ 189-வது வருடம் பக்தாதிலிருந்தே "இஹ்ராம்" கட்டிக்கொண்டார்கள்,

ரமலான் மாதத்து உமராவின் பாக்கியத்தைப் பெற்று, பரிசுத்த திரு மதீனமா நகருக்குச் சென்றார்கள். ஹஜ்ஜின் காலம் அடுத்துவந்ததும் திரும்பவும் மக்காவுக்கு வந்தார்கள். ஹிஜ்ரீ 186-வது வருடம் ஹஜ்ஜின்போது கலீபா ஹாரூன் ரஷீத் அவர்கள் 10,50,000 பத்து லக்ஷத்து ஐம்பதாயிரம் தீனார் (தீனார் ரூபாய் 3-8-0 ஆகும்.) ஹரமைனைச் சார்ந்தோர்க்கு இனாம்அளித்தார்கள். கலீபா அவர்கள் தவாபு செய்வதில் அதிபெரும் பிரியமுடையவர்களாகவும், அதில் சுருசுருப்புடையவர்களாகவு மிருந்தார்கள். அவர்கள் தவாபு செய்ய வாரம்பித்தால், அவர்களுடன் வேறு எவரும் பின்தொடர்ந்து நடக்க முடியாதவாறு அதிவேகமாய் நடப்பார்கள். தினசரி மகரிபுக்கும், இஷாவுக்குமிடையில் 13 தடவை பவாபு செய்வது வழக்கம். கலீபா ஹாரூன் ரஷீத் அவர்களுக்குப்பின் தோன்றிய அப்பாஸீகலீபாக்கள் எவரும் ஹஜ்ஜு செய்யும் பாக்கியத்தைப் பெறவில்லை.

ஹிஜ்ரீ 186-வது வருடம் ஹஜ்ஜுக்கு விஜயஞ்செய்திருந்த போது, கலீபா அவர்கள் தங்களின் இரு இளவரசரு (அமீன், மஃமூன்) க்காக ஜனங்களிடம் இராஜ விசுவாசப்பிரமாணம் வாங்கினார்கள். அதைச்சார்ந்த சரித்திரம் வெகுநீளமாகவிருப்பினும், வெகு ஆச்சரியமானது. ஆகவே, வாசகர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு அதன் சுருக்கம் வருமாறு:—

கலீபா ஹாரூன் ரஷீத் அவர்கள் தம் இளவரசராகிய (அமீன், மஃமூன்) இருவரையும் தன்னோடு திருமக்காவிற்கு அழைத்து வந்தார்கள். அவர்களின் எல்லா உரவினர்களும், இராஜாங்கத்தின் மந்திரிபிரதானிகளும், இராக் தேசத்து உலமாக்களும் விஜயஞ்செய்திருந்தார்கள். இவர்களெல்லோரும் மதீனாவையடைந்து, அவ்விடம் இரண்டு நாட்கள் தங்கியிருந்து, மதீனாவைச் சார்ந்தோர்க்கு இனாம் அளித்தார்கள். அந்த இனாமில் முதன்முதல் தம்முடைய பாகத்தை எடுத்துக்கொண்டதன்பின்பு தம்புத்திரர் இருவருக்கும் இனாம் அளித்துவிட்டு, மற்ற ஸாதாத்துகளுக்கு இனாம் வழங்கினார்கள். மூன்றாம் நாள் பிரயாணமாகி திருமக்காவையடைந்து, துல்ஹஜ்ஜுமீ 7வ ஹரம் ஷரீபில் மிம்பரிலேறி (குத்பா) பிரசங்கம் புரிந்தார்கள். அதன்பின் சங்கைபொருந்திய கஃபாவுக்குட் சென்று வெகுநேரம் துஆ இரந்த பின்னர், தம்மிரு இளவரசர்களையும் ஒருவர்பின் ஒருவராக அழைத்து நற்போதனை செய்து, மந்திரிபிரதானி (அதில் எஹ்யா பர்மக்கீயும், ஜஃபர் மக்கீயும் இருந்தனர்.) களையும் அழைத்து, கஃபாவினுள் மேற்கூறியவர்களின் முன்னிலையில் அறுதிமானப் பத்திரம் எழுதி வாங்கினார்கள்.

அதன் வாசகமாவது:—கலீபா ஹாரூன்ரஷீத் அவர்கள் மரண மடைந்தபின்னர் கிலாபத் ஸ்தானத்தை அமீன் அடைகிறது; மஃமூன்குராஸான இராஜ்யத்தையடைகிறது; அமீன் மரணமடைந்த பின்பு கிலாபத் ஸ்தானத்தை மஃமூன் அடைகிறது. சகோதரர் இருவர்களுக்கிடையில் ஒருவருக்கொருவர் நட்பையும், ஒற்றுமையையும் கொண்டிருக்க வேண்டும். ஒருவருக்குரிய உரிமையை மற்றவர் அபகரித்துக் கொள்ளக்கூடாது. இவ்வுடன்படிக்கைக்கு மாற்றமாய் நடப்பவர்கள் தங்கள் மனைவிகளுக்கு (தலாக்) விவாகரத்து கொடுத்துவிட வேண்டும்; தங்கள் எல்லாசொந்த ஐவேசுகளையும் தர்மஞ்செய்து விட வேண்டும்; கால்நடையாக நடந்து ஹஜ்ஜு செய்யவும் வேண்டும்" என வரையப்பட்டிருந்தது. இப்பத்திரத்தை அவ்விடம் விஜயஞ் செய்திருந்தவர்கள் யாவருக்கும் வாசித்துக் காட்டப்பட்டது. மக்காவின் காஜீ, கஃபா ஊழியர், மந்திரி, ஹாஷிமி வகுப்பின் ஸாதாத்து ஆகியவர்கள் அதில் சாட்சியாக கைச்சாத்திட்டார்கள். அப்பத்திரத்தை கஃபாவின் வாயலில் ஹஜ்ஜின் போது யாவரும் வாசிக்கும்படியாய் திறந்தும், மற்றக்காலங்களில் வெள்ளிக்குழாயில் அடைத்து தொங்க விடவும், அதைப்பாது காப்பதற்காகவும் ஷீபீயவர்களிடம் ஒப்புவித்தார்கள்.

இப்பத்திரங்கள் கலீபா ஹாரூன் ரஷீத் அவர்களின் எஞ்சியுள்ள ஜீவிய காலம் வரையில் கஃபாவில் தொங்கவிடப்பட்டிருந்தது. அவரின் மரணத்திற்கு பின்னர், அமீன் கலீபாவாக ஏற்பட்டு இரண்டுவருடங்களுக்குள் சகோதரர்களுக்கிடையே வேற்றுமை ஏற்பட்டுவிட்டது. அதனால் இரத்தஞ் சிந்தும்படியாகி விடவே, கலீபா அமீன் அவர்கள் அப்பத்திரத்தை மக்காவிலிருந்து தருவித்து அக்கினிக்கு இரையாக்கிவிட்டு, அதில் கூறப்பட்டிருந்த எல்லா தண்டனைகளுக்கும் உட்பட்டார்.

ஜமீலா. காத்தூன்

மோஸல் தேசத்து இராணி ஜமீலா பிந்து நாஸிருத் தௌலா என்னும் மாதரிசி ஹிஜ்ரீ 336-வது வருடம் ஹஜ்ஜு செய்தார். அவர் தன்னோடு 10,000 பதினாயிரம் ஒட்டகைகளின் காபிலாக்களையழைத்துக்கொண்டு வந்திருந்தார். அவருடன் 1000 ஆயிரம் பசுங்கன்றுகளுமிருந்தன. பாதையில் களைத்துப் போகிறவர்களையும், ஏழைகளையும் ஏற்றிச் செல்லுவதற்காக 500 ஒட்டகங்களுமிருந்தன. இன்ன ஒட்டகத்தில் தான் இராணியார் ஏறியிருக்கிறார்களென்று எவரும் தெரிந்து கொள்ள முடியாதவாறு, ஒரே மாதிரியும், ஒரே நிறமுடையதுமான போர்வைகளையுடைய 400 ஒட்டகங்களையும் கொண்டுவர்

திருந்தார். இராணியார் மக்காவில் பச்சைத் தர்காரீகள் (காய்ப் பதார்த்தங்கள்) கிடைக்காதென்ற எண்ணத்துடன், கொடிவக்குள்ளில் புதிய தர்காரீகளைக் கொண்டுவந்தார். இம்மாதரசியவர்கள் தர்மசிந்தனை யுடையவரென பொது ஜனங்களால் மதிக்கப்பட்டு வந்தார்.

இவ்வரசி முதல் முதல் கஃபாவில் பிரவேசித்தபோது 10,000 தீனார்களைத் தர்மஞ்செய்தார். மக்காவில் இருந்தகாலம் வரையில் ஹரம்ஷரீபில் "அன்பர்" வாசனையைத் தரும் விளக்குகளைப் பிரகாசிக்கச் செய்தார். "அலவிய்யா" வென்னும் குடும்பத்தைச் சார்ந்த ஆண் பெண் யாவரையும் மகிழ்வுறும்படி செய்து மக்காவில் 300 அடிமைகளையும், 200 லௌண்டி (வெள்ளாட்டி) களையும் உரிமை விட்டார். ஹரமைனைச் சார்ந்த எல்லா புக்ஹாக்களுக்கும் இனும்அளித்தார். அநேகர்கள் உடுப்புகளும் நன்கொடையாக அளிக்கப் பெற்றார்கள். அரபாத்தில் தன்னுடன் கொண்டுவந்திருந்த பனிக்கட்டியுடன் ஷர்பத்து தயார்செய்து பொதுவாய் யாத்ரீகர்களுக்கு புகட்டப்பட்டது. இப்பரிசுத்த ஹஜ்ஜில் அம்மாதரசி 15,00,000, பதினைந்து லக்ஷம் தீனார்களைச் செலவு செய்தார்.

அல் அமீருல் உதுமான்.

அதன் தேசத்து அரசர் அல் அமீருல் உதுமானிப்னு அலீ ஸன் ஜபீல் என்பவர் ஹிஜ்ரீ 575-வது வருடம் ஹஜ்ஜு செய்தார். இவர் பெரும் அநியாயக்கார இராஜன். இந்தியாவிலிருந்து அதன் தேசத்திற்கு வியாபாரத்தோரணையில் வரும்பொருள்கள் யாவற்றையும் அவ் வநீதக்கார இராஜன் கைப்பற்றிக் கொண்டிருந்தார். அதனால், காரூன் (அநியாய) பொக்கிஷம் சேர்ந்தது. ஆனால், இறுதியாக இவரின் தலையை நசுக்கும்படி அல்லாஹுதஆலா "அல்அமீர் ஸைபுல் இஸ்லாம்" என்பவரைச் சாட்டிவிட்டான், யுத்தத்தின் போது தோல்வியுற்று, கரைமார்க்கமாக தன்வேலையாட்களுடன் திருமக்காவிற்குச் சென்றார். அவர் தன்னோடு இரத்தினம், மாணிக்கம் போன்றவிலையுயர்ந்த பொருள்களின் பேழையையும் மக்காவிற்குக் கொண்டுவந்திருந்தார். ஏனைய பொருள்களை வழியிலுள்ள கடலில் எறிந்துவிட்டார். அவைகளை ஸைபுல் இஸ்லாமுடைய யுத்தக்கப்பல் கைப்பற்றிக்கொண்டன. அதன் தேசத்தரசர் தன் துர்க்கிருத்தியத்தின் பாவம் நிவர்த்தியாகும் பொருட்டு மக்காவில் சில நற்காரியங்களைப் புரிந்திருக்கிறார்.

(1) ஹரமுக்கு சமீபம் "பாபுல் உம்ரா" வென்ற இடத்தில் ஓர் மதரஸாவைக் கட்டி வக்புசெய்தார். (2) ஷை மதரஸாவுக்கு முன்

புறம் முஸாபர்கானு (ஹஜ்ஜு யாத்ரீகர்கள் தங்கியிருக்க சத்திரம்) ஒன்று கட்டினார். (3) அவ்வருடம் ஹஜ்ஜின் தேதி வெள்ளிக்கிழமையாகவிருந்தது. (வெள்ளிக்கிழமையதினம் ஹஜ்ஜு வருவதை பொது ஜனங்கள் "ஹஜ்ஜுல் அக்பர்" என்று மொழிகின்றார்கள்.) ஆகையால், எண்ணிறந்த ஹாஜிகள் ஹஜ்ஜுக்கு விஜயஞ்செய்திருந்தனர். "அரபாத்தில் இந்த ஹஜ்ஜுக்குமுன் எவ்வருடமும் கூடிராத ஓர் அதிபெரும்ஜனத்திரள் குழிமியிருந்தது" என அல்லாமா இப்னு பஹத் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவ்வருட ஹஜ்ஜுக்கு அமீர் மஸ்ஊதின் சகோதரியும், மோஸல் அரசரின் தாயாரும், இஸ்பஹான் தேசத்தரசரின் சகோதரியுமாகியமூன்று அரசிகளோடு, பெருந்திரளான ஜனங்களும் குராஸான் தேசத்திலிருந்து வந்திருந்தனர். அவ்வமயம் மக்காவுக்கும், அரபாத்துக்கு மிடையில் வழிமறித்து கொள்ளையிடும் பதவிகளின் கொடுமைகள் மிக அதிகமாய் இருந்தன. அப்பதவிகளின் அச்சத்தினால் ஹாஜிகள் துல்ஹஜ்ஜு மாதம் 8உ மினாவில் தங்காமல் நேரே அரபாத்துக்குச் செல்ல வாரம்பித்தார்கள். இவ்விஷயத்தை செவியுற்ற அதன் அரசர் தன் பரிவாரங்களோடு முன் சென்று, பதவிகள் அதிகமாய் ஹஜ்ஜாஜிகளை வழி மறித்துக் கொள்ளையிடும் முஸ்தலிபாவுக்கும், அரபாத்துக்கு மிடையிலுள்ள மலைக்கணவாயில் கூடாரம் அடித்து தங்கியிருந்ததோடு, பதவிகள் ஹஜ்ஜு யாத்ரீகர்களை யடுக்காதிருக்கும் பொருட்டு, தன் ஆட்களை மலையின்மேல் சென்று காவல் புரியும்படி செய்தார். அதனால், ஹாஜிகள் பதவிகளின் கொடுமையை விட்டுத்தப்பி, சுகமே அரபாத்தை யடைந்து, அதன்தேச அரசருக்கு நல் துஆ இரந்தனர்.

அல் முஅல்லம் மலிக்குஷ்ஷாம்.

ஹிஜ்ரீ 611-வது வருடம் அல் மலிக்குல் முஅல்லம் ஈஸா இப்னு ஆதியில் ஐயூபி அவர்கள் ஹஜ்ஜுக்கு வந்தார்கள். ஹஜ்ஜு செய்யும்பொருட்டு வந்த புக்ஹாக்களுக்கு ஏற்வாகனமும், பிரயாணத்திற்கு வேண்டிய சாமான்களையும் தயார்செய்து இனமாக கொடுத்தார். ஹரமைனைச் சார்ந்தோர்க்கு அளவிறந்த சன்மானங்களை யளித்து, சுன்னத்தான தரீக்காவின்படி ஹஜ்ஜை நிறைவேற்றினார். இவருக்கு முன் விஜயஞ்செய்திருந்த மன்னர்கள் அநேகமாய் துல்ஹஜ்ஜு மாதம் 9உ இரவு மினாவில் தரிபடுகிற சுன்னத்தைச் செய்கிறதில்லை. ஆனால், அல்மலிக்குல் முஅல்லம் அவர்கள் 9உ இரவு மினாவில் தங்கியிருந்து, 10உ அதிகாலையில் அரபாத்துக்குச் சென்றார். இவர் அரபாத்திலுள்ள் ஹௌலை மராமத்துச் செய்தார்.

மதீனாவின் அமீர் இவ்வரசரை வரவேற்று, அதிவிசேஷமாய் உபசரித்ததனால், அரசருக்கு அவரிடத்து அதிக நட்புவேற்பட்டது. ஆனால், மக்காவின் அமீரோ அல்மலிக்குல் முஅல்லமிடம் சாதாரணமாய் நடந்து கொண்டார். அதனால், இவரிடத்தில் அரசருக்கு வெறுப்புண்டாயிற்று. மதீனாவின் அமீருக்கும், மக்காவின் அமீருக்கும் இடையில் யுத்தமேற்பட்டபொழுது அவ்வரசர் மதீனாவின் அமீருக்கு உதிவிபுரிந்தார்.

அல் முல்பர் ஷாஹ் எமன்.

எமன் தேயத்து அரசர் அபுல் முல்பர் என்பவர் ஹிஜ்ரீ 655 வது வருடம் ஹஜ்ஜு செய்தார். இவர் மக்காவுக்கு சமீபித்துவிட்ட செய்தியை அறிந்த மக்காவின் அமீர் மக்காவைவிட்டும் வெளியே சென்றுவிட்டார். ஏனெனின், அவர் முன்னதாகவே "முல்பர்" இடம் அச்சங்கொண்டிருந்தார். முல்பரின் பட்டாளம் "ஹஜுன் என்னுமிடத்தில் தங்கியிருந்தது. அபுல் முல்பர் ஐந்து நேரத் தொழுகைகளை ஹரம் ஷரீபிலேயே நிறைவேற்றிவந்தார். கஃபா ஷரீபின் உட்புறம் கழுகியபோது, அரசரும் அவ்வூழியத்தில் ஈடுபட்டார். கஃபாவுக்கு புதியவாயலைக்கட்டி, யதற்கு பூட்டுமிட்டு, கஃபாவுக்காக தங்கம், வெள்ளி நாணயங்களைத் தர்மஞ்செய்தார். அப்பாஸீ வகுப்பு கலீபாக்களுக்குப் பின்னர், மாற்றப்படாமலிருந்த கஃபாவின் போர்வையை மாற்றி, புதிய போர்வையைப் போர்த்தார்.

மக்காவாசிகளுக்கு இனும் முதலியவைகளினால், மனம் ஆனந்தமடையும்படி செய்தார். நேரே வந்து இனும்களை பெற்றுக்கொள்ள இஷ்டப்படாதவர்களுக்கு, அவர்களின் இல்லத்திற்கு நாணயங்களையும், பிடவைகளையும் அனுப்பினார். ஹஜ்ஜு கழித்து பத்து நாட்கள் வரையில் மக்காவிலிருந்துவிட்டு, எமனுக்குப் புறப்பட்டார். அவர் சென்றுவிட்ட செய்தியை அறிந்த மக்காவின் அமீர் நான்கு நாட்கள் கழித்து திருமக்கமா நகருக்கு வந்தார்.

மலிக்குல் லாஹிர் பீபரஸ்.

மிஸர் தேசத்து அரசர் மலிக்குல் லாஹிர் பீபரஸ் என்பவர் ஹிஜ்ரீ 667-வது வருடம் ஹஜ்ஜு செய்தார். இந்த ஹஜ்ஜு செய்த வரலாறாவது:—மக்காவின் அமீர் "ஷரீப் அபூநமீ" என்பவர் பீபரஸ் அரசருக்கு மரியாதியற்ற முறையில் ஒரு நிருபத்தில் "நான் உமக்குப் பயப்படமாட்டேன். நீர் எப்பொழுதாவது (மக்காவிற்கு) வருவீரானால் உம்முடைய உல்லாச வாழ்க்கையின்முடிவு தெரிந்துவிடும். நீர் வருவதாயிருந்தால் மேகவர்ணியில் ஏறிவரவேண்டும்" என வரைந்திருந்தார்.

சுல்தான் பீபரஸ் அக்கடிதப்படி மக்காவுக்குச் செல்லுவதற்கான யோசனையைச் செய்துவந்தார். தான் ஹஜ்ஜுக்குப் புறப்படுவது மக்காவின் ஷரீபு முதற்கொண்டு எவரும் அறியாமல் போக ஏற்பாடுசெய்தார். இதையறிந்த ஒருவர் ஜனங்களுக்கிடையில் பிரசாரஞ்செய்து விட்டார். ஆகவே, அவரைக் கொண்டுவரச்செய்து, அவரின் நாக்கு வாங்கப்பட்டது. சுல்தான் அவர்கள் ஷெள்வால் மாதம் கைரோவிலிருந்து, வேட்டையாடப் புறப்படுவதாய் பொதுஜனங்களுக்கு அறிவித்துவிட்டு, சில தலைவர், சிப்பாய், 300 அடிமை ஆகியவர்களோடு புறப்பட்டார். துல் கஃதா மாதம் முதற் தேதியில் "அல்கரக்" என்னும் இடத்தையடைந்து, ஹஜ்ஜு யாத்திரைச் செல்லுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சுல்தானும், அவரோடிருப்பவர்களும் மன்ஸலிலிருந்து புறப்படுமுன் கூடாரம், சாமான்கள் ஏற்றிச் செல்லும் ஒட்டகங்கள் ஆகியவைகளை மறுமன்ஸலுக்கு அனுப்பிவிடுவார்கள். ஒவ்வொரு மன்ஸலிலிருந்தும் புதிதாய் தயாரிக்கப்பட்ட வாகனங்களில் ஏறி சென்றார்கள். துல்கஃதா மாதம் 25வ தேதியில் மதீனாவையடைந்து, சிலநாட்கள் தங்கி மக்காவுக்குப் புறப்பட்டார். துல்ஹஜ்ஜு மாதம் 8வ ஹாஜிகள் அநேகமாய் ஹஜ்ஜுக்குச் சென்று, மக்காவின் அமீர் மட்டு (சுல்தான் பீபரஸ் வருகிற செய்தியறியாது) எஞ்சியிருக்கும் சமயம் மக்காவையடைந்தார்கள். அவ்வமயம் எவ்விதமாகவோ "யாரோ ஒரு தலைவர் தன் கபீலாக்களுடன் மக்கமா நகரை முன்னோக்கி வந்துவிட்டதாக மக்காவின் அமீர் கேள்வியுற்று, அவர்களை வரவேற்பதற்காக நகரைவிட்டும் வெளிக்கிளம்பிச் சென்றார். யாத்திரீகர்கள் யாவரும் மேகவர்ணக் குதிரையில் ஏறியிருப்பதுடன், இஹ்ராமும் கட்டியிருப்பதைக் கண்ணுற்று திடுக்கிட்டவராய், நீங்கள் யார்? துருக்கியர்களா? இராக்கியர்களா? ஈரானியர்களா? எனக் கேட்டார்.

சுல்தான்:—நாங்கள் இன்னாரென்று உமக்குத் தெரியாதா? யாரை மேகவர்ணக் குதிரையின்பேரில் ஏறிவரும்படியாய் நிருபம் எழுதினீரோ அவர்களே நாங்கள். நான் மிஸர் தேசத்து அரசன், இவர்கள் (தன்னுடனிருக்கும் தலைவர்களைச் சுட்டிக்காட்டி) மிஸர் ஷாம் தேசத்துத்தலைவர் களாகும்; நாங்கள் இஹ்ராம் கட்டிய ஹாஜிகள்; நீர் எங்களெல்லோரையும் வெட்டிவிடும்; அவ்விதம் செய்ய உமக்கு சுயேச்சையுண்டு மென்றார்.

இதைச் செவியுற்ற மக்காவின் ஷரீப் அபூநமீ அதிகவெட்கமடைந்து, சுல்தான் அவர்களிடம் தன்னுடைய ஒழுங்கற்ற நடத்தையை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டு, அவர்களை தன்னோடு அழைத்து

பட்டணத்திற்குட் பிரவேசித்தார். அவர்களை ஹரம் ஷரீபுக்கு அழைத்துச் சென்று சுல்தான் அவர்களுடன் தானுமிருந்து "தவா புஸயி," செய்வித்தார். அவ்விடமிருந்து சுல்தான் அவர்களும், அவர்களோடு வந்திருந்தவர்களும் அரபாத்துக்குச் சென்று ஹஜ்ஜைநிறைவேற்றினார்கள். சுல்தான் அவர்கள் மிகப் புகழுக்குரியவராகவிருந்தார். ஹரமைனைச் சார்ந்த உயர் குலத்தினோர்களுக்கு தான் அதிக தர்மங்கள் செய்ததோடு, தன்னுடன் வந்த தலைவர்களையும் இனாம்கள் அளிக்கும் படியாய் உத்திரவு செய்தார். அதற்காகவேண்டி ஒரு பெருந்தொகையை அளித்தார். ஹரமைனைச் சார்ந்த புகஹாக்களுக்கு வருடா வருடம் 10,000 பதினாயிரம் கலம் கோதுமை கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்.

சுல்தான் பீபரஸ் அவர்கள் அதிபெரும் புகழுக்குரிய காரியத்தைச் செய்தார். அஃதாவது:—மக்காவின் அமீரும், அவரைச் சார்ந்த அதிகாரிகளும் எமன்தேயத்திலிருந்து வரும் ஹஜ்ஜாஜிகளிடம் ஒட்டகையொன்றுக்கு 30 திரஹமும், மிஸர் ஷாம் தேசத்து ஹாஜிகளிடம் ஒட்டகையொன்று 50 திரஹமும், மற்றும் வியாபாரத்தின் பொருட்டுவரும் சாமான்களுக்கும் சுங்கவரி வாங்கிவந்தனர். அதனால் எமன், மிஸர், ஷாம் ஆகிய தேயத்திலிருந்து ஹாஜிகள் அதிகமாய் மக்காவுக்கு வருவதில்லை. இக்கொடுமையான வரிவிதிக்குதலை சுல்தான் அவர்கள் தடுத்து, அதுமுதல் கியாமநாள் வரையில் மக்காவின் அமீர்கள் ஹாஜிகளிடம் வரிவாங்கக்கூடாதென்று அறுதிமாணம் வாங்கியதோடு, அவர்களுக்கு ரொக்கமாகவும், தானியமாகவும் சம்பளங்களையேற்படுத்தினார். அதற்காக மிஸரின் பொக்கிஷத்திலிருந்து அளவிறந்த நாணயங்களைக்கொடுக்கப்பட்டது. அக்காலமுதற்கொண்டு, சிலவருடங்கள் வரையில் ஹாஜிகளுக்கு நிம்மதியான ஹஜ்ஜு கிட்டியது. ஹஜ்ஜு முடிந்ததும் சுல்தான் அவர்கள் மதினாவுக்குச் சென்று அவ்விடத்திலும் அநேக கைராத்துகள் செய்தார். நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரிசுத்த கபரின் சுற்றுப் பக்கங்களில் கைப்பிடிவேலியடைப்பு இல்லாததினால், ஜனங்கள் ஒழுக்கமற்று கபர்ஷரீபுக்கு வெகுசமீபத்திலும் நடமாடினார்கள். இச்செய்கை சுல்தான் பீபரஸுக்கு பிடிக்கவில்லை. ஆகவே, சுல்தான் அவர்கள் தங்களின் கரத்தினால் கபர்ஷரீபின் சுற்று புறங்களை அளந்து கொண்டார். மிஸ்ருக்குச் சென்று மரங்களாற் செய்யப்பட்ட ஓர் அடைப்பை மறுவருடம் அனுப்பி, கபர்ஷரீபின் சுற்றுப்புறம் போடும்படி ஆக்ஞாபித்தார்.

(தொடரும்.)

அல்ஸலாம்.

அல்லாஹு அக்பர் !

அல்லாஹுத ஆலாவின் நண்பர் கலீலுடைய பரிசுத்த சுன்னத்தை நிறைவேற்றுபவர்களே ! கஃபாஷரீபை கண்ணிய பார்வையோடு நோக்குபவர்களே !! தபீஹுல்லாஹ்வுடைய வழிப்பாட்டில் நட்புக்கொள்ளுபவர்களே !!!

ஈதுல் லுஹா முபாரக்.

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் லாஇலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர்; அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து.

உலக ரக்ஷகன் ; அதிதயாள வல்லன் ; பரிசுத்த அல்லாஹுத ஆலாவின் ஆக்ஞைக்குட்பட்டு, ஹஜ்ரத் ஸைபிதிணு இப்ராஹீம் கலீ லுல்லாஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் தங்களருமை கண்மணியான ஹஜ்ரத் ஸைபிதிணு இஸ்மாயீல் தபீஹுல்லாஹ் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அல்லாஹுத ஆலாவுக்காக தன் பரிசுத்தக் கரத்தினால் பலிகொடுத்த புண்ணிய தினமாகும். இத்தினத்தில் தபீஹுல்லாஹ்வின் யாபகார்த்தமாக முஸ்லிம்கள் குர்பானீ செய்யவேண்டும். ஆனால், தற்காலம் நம்தேச நிலையோ முஸ்லிம்கள் சொல்லொண்ணா கஷ்டங்களுக்கு ஆளாகும்படியாய் இருக்கின்றது. ஆகவே, குழப்பம், கலவரம் உண்டாகாதவாறு முஸ்லிம்கள் நடந்து கொள்ள வேண்டும். ஏனெனின், அதனால், அநேக உயிர்களும், முதல்களும் பறிகொடுத்து, பரிதபிக்கும்படி யேற்படுகிறது. எல்லாம் வல்ல இறைவன் நம்மவர்களுக்கு சகிப்புத் தன்மையை யளித்து, சாந்தியாக்கி வைப்பானாக !

ஆமீன். வஸ்ஸலாம்.

Kesari Printing Works,
Madras.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை.

(மௌலானா அபுல் ஜலாலிசாஹிப் நத்வி எழுதியது.)

சமாதானம் ஓர் அதிமுக்கியமானதாகும். உண்மையாக "காப ராகும்படி" செய்யக்கூடியதும், அல்லாஹுதஆலாவுக்கு பாவியாகும்படி செய்யக்கூடியதுமாகிய காரியங்களைத் தவிர, நம்முடைய உரிமைகளிற் சிலதை அச்சமாதானத்தை நிலைநிறுத்தும் பொருட்டு விட்டுக் கொடுக்கமுடியும். நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் திருநாமமாகிய "முஹம்மது" என்றதன் பின் "ரஸூலுல்லாஹ்" என்று மொழிவதை ஈமானின் ஓர் அங்கமாக உறுதிகொண்டிருக்கும் நிலைமையில், இன்று ஒரு முஸ்லிமிடம் நமது நாயகம் அவர்களின் திருநாமமாகிய "முஹம்மது" என்றதன் பின், "ரஸூலுல்லாஹ்" என எழுதக்கூடாதென்று மறுக்கப்படுவானாயின், அவனுடைய ஹிர்தயம் சகித்திருக்கமாட்டாது.

ஆனால், ஹுதைபியாவில் மக்காவின் முஷ்ரிக்குகளுக்கும், முஸ்லிம்களுக்கும் சமாதான உடன்படிக்கை யேற்பட்டது. அச்சமாதான உடன்படிக்கையில் "ஹாதா மா கலா அலைஹி முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்று எழுதப்பட்டிருந்ததை மக்கத்து முஷ்ரிக்குகள் மறுத்து, "நாங்கள் முஹம்மதை "ரஸூலுல்லாஹ்" வென அறிந்திருந்தால் அவருக்குக் கீழ்படிதல், அவருடைய ஆக்ஞைஆகியவைகளுக்கு உட்பட்டுவிடுவோம். ஆகவே, "ரஸூலல்லாஹ்" என்பதையழித்துவிட்டு, முஹம்மதிப்னு அப்துல்லாஹ் (அப்துல்லாவின் புத்திரர் முஹம்மது) என்று எழுதவேண்டுமென கேட்டுக்கொண்டார்கள்." அதன்பேரில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களே "ரஸூலுல்லாஹ்" வென்ற பதங்களை யழித்துவிட உத்திரவு செய்தார்கள். இந்நிலைமையில் அதையெழுதிய ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஈமானின் உறுதிப்பாட்டினால் அதையழித்துவிட இஷ்டப்படாமல் மறுத்துவிட்டார்கள். அதன் பேரில் நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்களின் பரிசுத்தமான கரத்தினால் "ரஸூலுல்லாஹ்" என்ற வாசகத்தை அடித்துவிட்டார்கள். இதைக் கண்ணுற்ற ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெகு ஆத்திரத்துடன்

நாயகமவர்களை நோக்கி "தாங்கள் அல்லாஹுத்த ஆலாவின் தூதராக விருக்கும் நிலைமையில், தாங்களே "அல்லாஹுத்த ஆலாவின் தூதர் என்ற வார்த்தைகளை யடித்துவிட்டீர்கள்" என்று கூறினார்கள்.

மேற்கூறிய நடவடிக்கைகளில் நம்மவர்கள் கற்றுக் கொள்ளக் கூடிய சில பாடங்கள் பொதிந்திருக்கின்றன. (1) நம் ஹிருதயம் பிரியப்படாததும், ஈமானுக்கு மாற்றமுடையதுமான உண்மை யிலேயே கெடுதியுடைய காரியத்தைச் செய்யும்படி எப்படிப்பட்ட முர்ஷிதும் (மார்க்கத் தலைவரும்) நம்மை பலவந்தப் படுத்தமுடியாது. ஏனெனின், நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "ரஸூலுல்லாஹ்," என்ற வார்த்தைகளை யடித்துவிடும்படி, ஹஜ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களை நிர்பந்தம் செய்யவில்லை. ஹஜ்ரத் அலீ அவர்கள் "ரஸூலுல்லாஹ்" வென்னும் வார்த்தைகளை யழித்துவிட மறுத்து விட்டதனால், அவர்களின் பேரில் "ரஸூலுல்லாஹ்"வின் உத்திரவுக்குக் கீழ்ப்படியவில்லை என்ற குற்றமும் ஏற்படவில்லை.

(2) நாம் எக்காரியத்தை உண்மைக்கு மாற்றமானதாக அறிகிறோமோ, அக்காரியத்தைப் புரியும் எப்படிப்பட்ட பெரிய முர்ஷிதுக்கும் அதை அறிவித்து விலக்குவது மரியாதைக் குறைவல்ல. ஆனால் கோபப்படாமல் இலேசாய் அறிவிக்கவேண்டும்.

(3) "முஹம்மது" என்றதன் பின்னர் "ரஸூலுல்லாஹ்"வென எழுதக்கூடாதென்ற உத்திரவுக்கு எச்சமயத்திலும் நாம் உட்படுவதற்கு அதிகாரமில்லை.

மேற்கூறியவைகளினால் தெரியவருவதாவது:—நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் சில வருடங்களின் தற்காலீகமான சமாதானத்தை முன்னிட்டு, தங்களின் கண்ணியத்திற்குக் குறைவேற்படுவதையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எக்காரியத்தை விடுவது குப்ர், ஈமானின் குறைவு, ஆகியவைகள் ஏற்படாததும் அல்லாஹுத ஆலாவுக்கும், அவனின் ரஸூலுக்கும் பாவியாக முடியாத சில முபாஹான காரியங்களை சமாதானத்தை முன்னிட்டு விட்டுக்கொடுக்கமுடியும். அதே ஹுதைபியாவின் சமாதான உடன் படிக்கையின் மூலமாய் முஸ்லிம்கள் ஒரு வருடம் ஹஜ்ஜுக்கு போகமுடியாமல் பலாத்காரமாய் தடுக்கப் பட்டார்கள்.

இப்போது பசுக்களைக் குர்பானீ செய்வதைப்பற்றிய மஸ்அலாவைஓர்ந்து ஆய்வோமாயின், பசுக்களை அறுப்பதோ, அல்லது அதைக் குர்பானீ செய்வதோ "ஜாயிஸ்" என நன்கு புலனாகும்.

எக்கருமத்தை செய்யவும், விட்டுவிடவும் முஸ்லிம்களுக்கு பரிசுத்த இஸ்லாம் மார்க்கம் சுதந்தரம் அளித்திருக்கிறதோ, அக் கருமத்திற்குத்தான் "ஜாயிஸ்" என்று சொல்லப்படும். ஹராமை (மார்க்கப்படி விலக்கப்பட்டதை) ஹலால் (மார்க்கப்படி ஆகுமானது) என்பதுதான் கண்டிப்பாய் ஆகாதது. (கூடாது.) ஜாயிஸான ஒருகாரியத்தையோ, அல்லது வஸ்துவையோ எப்போதும் விட்டுவிடுவதை ஹராம் என்றுசொல்லபடமாட்டாது. யாதொரு நிலைமையை முன்னிட்டு ஒரு ஜாயிஸான காரியத்தை எப்போதும் விட்டு விடக்கூடும். நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "நான் உடும்பை அருந்தமாட்டேன். ஆனால், அதை (யருந்துவதை) ஹராமாக்கவுமாட்டேன்" என திருவுளமாகியிருக்கிறார்கள். (திர்மதீ) இந்த ஹதீதைக் கொண்டு ஒரு ஜாயிஸா (ஆகுமா)ன வஸ்துவை தின்பதைவிட்டும் விலகிக் கொள்ளுவது ஹராமான காரியமல்ல. ஆனால், பிரமாணிக்கம் போன்றவைகளினால் ஒரு ஜாயிஸான வஸ்துவை தன்பேரில் எப்போதும் விலக்கப்பட்டதாகச் செய்துக் கொள்ளுவதுதான் ஹராமாகும். இதன் மூலமாய் "சுய நலம், தேசநலம் ஆகியவைகளை முன்னிட்டு பசுக்களைக் குர்பானீ செய்வதையோ, அதன் மாமிசத்தைப் புசிப்பதையோ விட்டுக் கொடுப்பதற்கு ஒவ்வொரு முஸ்லிமுக்கும் சுயேச்சை யுண்டுமென புலனாகிறது.

பசுவைக் குர்பானீ கொடுக்காமலோ, அல்லது அதை யறுக்காமலோ நிறுத்துவது மக்ரூஹான காரியமாகவிருப்பினும், நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் ஒற்றுமை, சமாதானம் ஆகியவைகளை முன்னிட்டு ஒரு வருடம் ஹஜ்ஜை நிறுத்திவிட்டதையும்,முஹம்மது என்றதன் பின்னர், ரஸூலுல்லாஹ்" என்று எழுதியிருந்ததை யழித்துவிட்டதைக் காட்டினும் விசேஷமானதல்ல.

பசுவைக் குர்பானீ செய்வது "ஷஆயிரல்லாஹ்" என்பதில் அறிவிக்கப்படுகிறது. ஆனால், "ஷஆயிர்" என்பதற்கு "குர்பானீ" என்ற பொருளேயன்றி, பசுக்குர்பானீ என்பதல்ல. குர்பானீ பர்லல்ல. சில உலமாக்களிடம் குர்பானீ வாஜிபாகும். ஆனால், எல்லா சுன்னத் ஜமாஅத்தார்களிடத்தில் குர்பானீ சுன்னத்து. ஒவ்வொருவிதத்திலும் குர்பானீ இஸ்லாமின் ஓர்முக்கிய காரியமாகும். ஆகவே, குர்பானீ வாஜிபு என நட்புக்கொள்ளுபவர்கள், குர்பானீயையே நிறுத்திவிடும்படி யோசனைக் கூறுவது குப்ராகும். குர்பானீ இஸ்லாமை பிரசாரஞ் செய்யும் ஹிக்மத்தைக் கொண்டிருக்கிறது. ஆகையால், குர்பானீயை

யே விட்டுவிடும்படி யான் யோசனை கூறவில்லை. ஆனால், தேச நிலைமையை யுத்தேசித்தும், ஒன்றுமையை முன்னிட்டும் பசுக்குர் பானியை நிறுத்தி விடுவதால் அநேகமாக யாதொரு குற்றமுமில்லை. வல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப்.

சுருங்கச் சொல்லுமிடத்து இந்தியாவின் எனையவகுப்பினர் களுடன் சமாதானத்தோடும், ஒற்றுமையோடுமிருக்க வேண்டியது நம்மவர்களுக்கு அவசியமாகும். ஒற்றுமையின்மை, கலவரம் ஆகியவைகளால் பிரயோசனமில்லை. கலவரம், குழப்பம் ஆகியவை களைத் தடுக்கும்பொருட்டு சமாதானம் அவசியமாகும். ஆகவே, சமாதானம், ஒற்றுமை ஆகியவைகளை நிலைநிறுத்தும் பொருட்டு குப்ரை வருத்தாததும், அல்லாஹ்வுக்கும், அவனின் ரஸுலுக்கும் பாவியாக்காததுமாகிய ஓர் ஜாயிஸான கருமத்தை விட்டுக் கொடுக்கும் படி நேரிட்டால், அப்போது அக்காரியத்தை விட்டுக்கொடுப்பதால் யாதும் கெடுதியில்லை. "அவர்கள் (பிறமதஸ்தர்கள்) சமாதானத்தை நாடுவார்களாயின், நீயும் நன்மைக்காக தாள்ந்துபோ, இன்னும், அல் லாஹுத ஆலாவினிடம் பாஞ்சாட்டிவிடும். ஆனால், அவர்கள் (பிற மதஸ்தர்கள் உம்மை) யேமாற்ற நாடுவார்களாயின், அல்லாஹுத ஆலா உமக்கு உதவிபுரிவதற்கு போதுமானவன். அவனே தன் உதவியை முஸ்லிம்களின் மூலமாய் (உமக்கு) எத்திவைக்கிறான். (அல்குர்ஆன்.)

ராஜ்ய பரிபாலனம்.

ஒரு தேசத்தில் ஹிந்து, முஸ்லிம், கிரிஸ்தவர், சீக்கியர் போன்ற பலதரப்பட்ட மதஸ்தர்கள் ரய்யத்துகளாக விருப்பார்களா யின் அத்தேசத்தின் ராஜாங்க சட்டதிட்டங்கள் மேற்கூறியபலதரப் பட்டமார்க்கத்தினர்களுக்கும் நன்மைப் பயக்கத்தக்கவிதமாய்அமைக் கப்படவேண்டியது அத்தேசம் நிலைமைக்குற்றதாகும். முஸ்லிம்களின் பர்லுகளோ யாவருக்கு தெரிந்தவைகளே. ஒவ்வொரு கிராமங்கள், பட்டணங்கள், ஜில்லாக்கள், மாகாணங்கள் ஆகியவிடங்களில் முஸ் லிம்களின் தலைவரின் பரிபாலனத்தின் கீழ் வணங்கும் ஸ்தலங்கள் இருக்கவேண்டும். அப்படிக்கொற்ற தலைவர்களே முஸ்லிம்களின் மார்க்க அதிகாரியாகும். முஸ்லிம்கள் இதரமதஸ்தர்களைத் தங் களின் கீழ் ஆளப்படுவோராக செய்துவைக்க வேண்டுமென்பது சரி யன்று. "அவர்கள் (முஸ்லிம் அல்லாதார்) உங்களிடம் (முஸ்லிம் களிடம்) தீர்ப்பை நாடிவருவார்களாயின், அவர்களுக்கிடையில் நீத த்தைக் கொண்டு தீர்ப்பளியுங்கள். இன்றேல், (விசாரிப்பதை)

மறுத்து விடுங்கள் '' என அல்லாஹுதஆலா குர்ஆன் ஷரீபில் திரு வுளமாகியிருக்கிறுன். (அல்குர்ஆன்)

இந்த ஆயத்தைக்கொண்டு முஸ்லிமல்லாதார் உங்களை அதிகாரி யாக, அல்லது பஞ்சாயத்தாராக ஏற்றுக்கொண்டார்களாயின், அதை முஸ்லிம்கள் ஒப்புக்கொள்ளவும், மறுத்துவிடவும் முஸ்லிம்களுக்கு சுதந்தரமுண்டு. ஆனல், மிகுந்த புக்ஹாக்கள் மறுத்து விடுவதை அதிஉத்தமமானது என அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். சமூகத் தலைவர்களே அச்சமூக அதிகாரியாகும். இக்காரணம் பற்றியே நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரி சுத்த காலத்தில் மதீனாவின் "யூதர்கள் தாங்கள் அளித்த வாக்குறுதி யின்படி நடந்து கொண்ட காலம் வரையில், அவர்களின் காரியங்களை அவர்களே நிர்மாணித்துக்கொள்ள பூர்ண சுயேச்சையைப் பெற்றிருந் தார்கள்'' ஆகையால், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பாகத்திலும் சம்பந்தத்தையுடைய ஒவ்வொரு மதஸ்தர்களும் தங்கள் தங்கள் காரி யங்களை யவர்களே நிர்மாணித்துக்கொள்ள சுயேச்சையிருக்கவேண் டும். அவர்கள் அப்பாகங்களின் பாதுகாப்பிற்கும், பரிபாலனத்திற் கும் ஏற்ற யோசனையைக் கூறக்கூடியவர்களாக விருக்கவேண்டும். சுய ராஜ்ய மென்பது ஒரு தனிப்பட்ட நபரின் ராஜாங்கமல்ல. ஆனல், அத்தேசத்தின் பொது ஜனங்களாற் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி களால் நடத்தப்படும் ராஜாங்கமே சுயராஜ்யமாகும்.

நம்பரிசுத்த இஸ்லாம் மார்க்கம் ஒவ்வொரு தேசத்தின் இரா ஜாங்க முறைகளையும் காட்டவில்லை. ஆனல், ராஜிய பரிபாலன சட்டதிட்டங்களின் அஸலைத் தெரியப்படுத்திவிட்டது. ஆகவே, அந்தந்த தேசத்தின் நிலைமைக்கேற்றவாறு தக்க வழிகளை நிர்மா ணித்துக் கொள்ளவேண்டியது நம்மவர்களின் கடமையாகும்.

துருக்கியும், இஸ்லாமிய ஊழியமும்.

துருக்கியர்கள் இஸ்லாமுக்கு விரோதமாய் நடக்கிறார்களென்ற கூற்றும், அவர்களின் இஸ்லாமிய மேன்மையான ஊழியங்களும்.

(ஜனப் சௌத்திரீ முஹம்மது ஸயீத் ஸாஹிபு எழுதியது.)

தற்கால நிலையோ ஒவ்வொருவர்களும் ராஜீய ஞானத்தில் முதிர்ச்சியுடையவர்கள் என நடிக்கக்கூடியதாக விருக்கிறது. ஆனல்,

உண்மையாக ராஜீய்ஞானம் முதிர்ந்தவர்களின் எண்ணிக்கையோ விரல்விட்டு யெண்ணக்கூடியதாக விருப்பது வருந்தத்தக்கதே. எவ் விஷயத்தையும் சீக்கிரமாக முடிவுசெய்யக் கூடாதென்பது பொதுவான அபிப்பிராயமாகும். அஃதேபோல், சில அவசர புத்தியுள்ள பத்திரிகா ஙிரூபர்கள் ஙிரபராதிகளான புதிய துருக்கியர்கள்மீது, பலவித மான தப்பபிப்பிராயங் கொள்ளக்கூடிய வியாசங்களை யெழுதி, தங்களின் கோணப்புத்தியினாலும், கல்விக்குறைவினாலும் அவர்களை (துருக்கியர்களை) இழிவுக்கு ஆளாக்கிவிட்டனர். துருக்கியர் இஸ்லாமிய உஸூலுக்கு மீறிவிட்டனர் என்று சிலரும், அவர்களை யிழிவானப் பெயர் கொண்டழைப்பவர்களாக சிலரும், பெண்களின் கோஷாவை நீக்கிவிட்டார்களென்று சிலரும் சொல்வதன்றி, துருக்கியர் பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தை விட்டும் நீங்கிவிட்டார்கள் என்று சொல்வதற்கும் சிலர் பின்னடையவில்லை.

அநேக நூற்றாண்டுகளாய் உதுமானிய இராஜ வம்சத்தைச் சார்ந்த சுல்தான்களாற் செய்யமுடியாத காரியங்களைத் தற்காலமுள்ள காஜீ முஸ்தபா கமால் பாஷா அவர்கள் ஜனநாயக ஆட்சியை யடைந்து, அதைப் பரவச்செய்யும் பொருட்டு செய்திருக்கும் சீர் திருத்தங்களை நாளது வரையில் முஸ்லிம் முலகம் அறியாதிருக்கும் சிலவற்றை நாம் கீழே வரைகின்றோம்.

அப்பரிசுத்தி சீர்திருத்தங்கள்:—

(1) கானிஸ்டாண்டிநோபிலில் ஆயிரக்கணக்கான விபசாரப் பெண்கள் ஜனங்களைத் துர்க்கிருத்தியத்திற்கு ஆளாகும்படி செய்வந்ததோடு, மேல்நாட் நாகரீகத்திற்கு இரையாகி யிருந்தனர். ஆகவே "இப்படிப்பட்ட துர்க்கிருத்தியங்களுடையபெண்கள் விவாகம்செய்து கொண்டு, கண்ணியமாய் குடும்பவாழ்க்கையை நடத்தவேண்டும். இல்லையேல், அவர்கள் தேசத்திற்கு நல்வாழ்த்துக் கூறிவிட்டு பிறநாட்டுக்குச் சென்றுவிடவேண்டும்." என உத்திரவுசெய்து, மேற்கூறிய ஹராமானக் காரியத்தைவிட்டும் நகரத்தைப் பரிசுத்தமாக்கியிருக்கிறார்கள்.

(2) மார்க்க சட்டதிட்டங்கள் சம்மந்தமாய் ஓர் பிரத்தியேக பாகமான அதிகாரயிலாக்காவை யேற்படுத்தியிருக்கிறார்கள். மார்க்கத்தின் எல்லா கஷ்டமான மஸ்அலாக்களையும் அவ்வதிகாரயிலாக்காவின் கீழ் (இஜ்திஹாத்) ஓர்ந்து ஆய்ந்து தயாரிக்கப்பட்டும், மார்க்கத்தின் சட்டங்களும் அவ்வதிகார யிலாக்காவின் கீழ் பிறப்பிக்கப்படுகின்றன. அதிபயங்கரமான குற்றத்திற்கு பிறப்பிடமாக

விருந்த போதகாசாலையும் மஸ்ஜிதுகளைச் சார்ந்த அறைகளையும் தேடிப் பிடித்ததில், அவ்விடங்களில் சௌந்தரவதிகளும், சாராய தாளிகளும் அகப்பட்டன. அவைகளை விலக்கி, கெடுதிசெய்வோர்களையும் தண்டித்து, அவ்விடங்களை சுத்தமாக்கப்பட்டது.

(அ) இவைகளுக்கு அரசாங்கத்தின் மூலமாய் ஆலிம்களையும், தீன்தாரிகளையும் நியமித்திருப்பதோடு, அதன் நிர்வாகத்திற்காக வருடாவருடம் நாலரை கோடி 4, 50, 00, 000 ரூபாயும் கவர்மெண்டு செலவு செய்கின்றது.

(ஆ) அநேகமாய் மஸ்ஜித்களின் இம்மாம்கள் ஜாஹிலானவர்களாகவிருந்தனர். அவர்கள் ஜனங்களுக்கு நேர்வழிக்காட்டக் கூடியவர்களாக விருக்கவேண்டியதற்கு மாற்றமாய், வழிகேட்டிற்குக் காரணப் பூதர்களாய் இருந்தார்கள். ஆகவே, அவர்களைவில்க்கி, அவர்களுடைய ஸ்தானத்திற்கு கல்விதேர்ச்சியோடு, பட்டம்பெற்றவர்களை நியமித்து, அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாய் சம்பளமும் பட்டுவாடாச் செய்யப்படுகின்றது.

(3) குர்ஆன்ஷரீபு வியாபாரத்தின் நோக்கத்தோடு அநேகமாய் அச்சிடப்படுவதால், அவைகளில் பிசகுகள் மலிந்திருக்கின்றன. அதிகலாபத்தையுத்தேசித்து இளக்கமான ராயல்கடிதத்தில் அச்சிடுவதோடு, குறைந்த கூலிக்கு சுத்தமற்ற காத்திப் (எழுத்துக்காரர்) களை யேற்படுத்தி விடுகின்றார்கள். அதனால், பரிசுத்த குர்ஆன் ஷரீபில் பல குறைகளிருந்தன. ஆகவே, வியாபாரிகள் எவரும் குர்ஆன்ஷரீபை அச்சிடாமல் தடுத்து, அரசாங்கத்தின் பார்வையில் குர்ஆன்ஷரீபு அச்சிடப்படுகின்றன.

(4) நடமுதல் வருடத்தில் குர்ஆன்ஷரீபை பாராயனஞ் (ஹிபஸ்) செய்பவர்களுக்காக 60,000. அறுபதுநாயிரம் ரூபாயை ஒதிக்கி வைப்பதற்கு துருக்கி அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதனால் துருக்கிய கவர்மெண்டு பரிசுத்த குர்ஆன் ஷரீபை பாராயனஞ் செய்பவர்களின் விஷயத்தில் எவ்வளவு நட்புக்கொண்டிருக்கிறதென்பது நன்கு புலனாகிறது.

(5) துருக்கியப் பெண்கள் பிறமதஸ்தர்களுடன் விவாகஞ் செய்துக் கொள்ளுவது போன்ற அருவருக்கக் கூடிய செய்கைகளைக் கண்டிப்பாய் தடுக்கப் பட்டு, மாதர்களால் இராஜாங்கம், இராணுவம் ஆகியவைகளின் இரகசியங்கள் இதரர்களுக்கு தெரிந்துவிடுகிறதனால், ஐரோப்பிய மாதுகளை விவாகஞ்செய்து கொள்ளும் துருக்கியர்களுக்கு அரசாங்கத்தின் உயர்ப்பதவியான உத்தியோகம் அளிக்கப் படுவதில்லை.

(6) மஹாயுதத்தின்போது வேலைச் செய்வதற்கு கணக்கற்ற வாலிபர்கள் முன்வரவேண்டியதாக விருந்ததும், அதன்பின் அனத்தோலியாவின் யுத்தகாலத்தில் அநியாயத்தில் முதன்மைபெற்ற கிரேக்கர்களின் இரத்தஞ்சிந்திய நடவடிக்கையும் துருக்கியமாதர்களுக்கிடையில் ஓர் பெரும் கிளர்ச்சியை யுண்டுபண்ணிவிட்டது. ஆகவே, துருக்கிய மாதர்கள் ஆடவர்களுடன் தோளோடு தோள் சேர்த்து உதவிச்செய்யவேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகும்படி நேரிட்டது. அதனால், அவர்களின் ஜீவிப்பும், கண்ணியமும், மேன்மையும் அதிகஷ்ட நிலைமையிலிருந்தன. யுத்தத்தில் காயமடைவோர்களுக்கு சிகிட்சை செய்வது, வண்டியோட்டுவது, சாமான்களைத் தூக்கிச்சொல்லுவது, இராணுவத்தில் புருஷர்களோடு சேர்ந்து யுத்தஞ்செய்வது போன்ற காரியங்களைச் செய்யும்படியாய் நேரிட்டது. அதன் மூலமாய் மாதர்களின் மதிக்கத்தக்க காரியங்கள் வெளியாயின. இது வரையில் துருக்கியர்கள் நிம்மதியான ஹிர்தயத்தோடு வாழ்க்கை நடத்தக்கூடிய நிலைமையை யடையவில்லை என்பது உலகமறிந்த விஷயம். தற்காலம் அன்னிய பிரஜைகளை துருக்கிய தேசத்திலிருந்து வெளியேற்றும் விஷயத்தில் அதிபெரும் கஷ்ட நிஷ்டூரத்தை யடையும்படியாய் ஏற்பட்டபோது, துருக்கிய மாதர்களும் ஆடவர்களோடு ஒவ்வொரு காரியங்களிலும் ஒற்றுமைக்கும்படியாய் நேரிட்டது. ஆகவே, அவர்களின் நடவடிக்கைக்கு இடையூறாகவிருந்த சில அனுஷ்டானங்களை நீக்கினார்கள். பெண்கல்விக்கு ஏற்பாடுசெய்யப்பட்டு, சட்டத்தின் மூலமாய் அவர்களின் பதிவிகளை யாடவர்களுக்குச் சமமாய் செய்வதற்கு முயற்சி செய்யப்பட்டது. கனிஸ்டாண்டி நோபில் தபால் இலாக்காவில் 300 முன்னூறு துருக்கிய மாதர்கள் கிளர்க்கு உத்தியோகம் செய்வதோடு, ஏனைய பலதரப்பட்ட இலாக்காக்களிலும் போதியவாறு உத்தியோகம் பெற்றிருக்கின்றனர். துருக்கியர்களின் வாழ்க்கையில் மாதர்கள் இரவுபகல் இருபத்து நான்கு மணிநேரத்தில் 6-அல்லது 7-மணி நேரமே சுகவாழ்க்கையில் செலவு செய்கின்றனர். இந்நிலைமையில் பூர்வகோஷா அனுஷ்டானத்தை நிலைக்கச்செய்யக் கூடவில்லை. ஆகவே, சமூகம், தேசம் ஆகியவைகள் உயிர்ப் பெற்றிருக்கவேண்டி ஓர் புதிய முறையாக உடுப்பை நிர்மாணிக்கும்படியான கட்டயாத்திற்காளானார்கள். இந் நிலைமையில் இராஜாங்கம், இராணுவம், தேசம், மார்க்கம் ஆகியவைகளின் தொண்டில் ஈடுபடாத இந்திய மாதர்கள் கடற்கரையில் உலாவுவது, டெனிஸ்போன்ற விளையாட்டு ஆகியவைகளுக்கு கோஷாவில்லாமல் புறப்படுவது துருக்கிய மாதர்களைப் பின்பற்றி வெளிக்

கிளம்புகிறோ மென்றுமொழிவது எந்த அறிவின் முதிர்ச்சியோ! தெரியவில்லை.

நம் இந்து தேசத்து சில பிரபுகளின் வீட்டு கற்றறிந்த மாதர்கள் சமூக ஊழியம், தேசநட்பு, இஸ்லாமிய நற்காரியம் ஆகியவைகளில் எள்ளத்தனையும் சம்பந்த மில்லாதவர்களாயும், அவைகள் சம்பந்தமாய் ஓர் வார்த்தைகூட பேசுவதற்கு விரும்பாதவர்களாய் மேல்நாட்டு நாகரீகத்தில் மூழ்கிக்கிடக்கும் உயிர்ப்பிணங்கள், தன் புருஷனுடன் தோள்சேர்ந்துநின்று யுத்தகளத்தில் மார்க்க யுத்தஞ் செய்வது, அதனுல் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்களை யேற்று சகிப்பது, பரிசுத்த இஸ்லாமுக்கும், தேசத்திற்கும் தன்னருமையான உயிரை குர்பானீ செய்வதற்கு அணுவளவும் பின்வாங்கா மேன்மையும், கன்னியமுமுள்ள துருக்கிய மாதர்களைப் பின்பற்றி நடக்கிறோமென்பது எவ்வளவு மூடத்தனமும், வருந்தத்தக்கதாகவு மிருக்கிறது!

மேற்கூறியவற்ருல் துருக்கியர்கள் மார்க்கத்தில் எவ்வளவு பற்றுடையவர்களென்பது நன்கு புலனுகிறது. அவர்கள் கரள்பிடித்த இஸ்லாமின் வாளை யுறையிலிருந்து எடுத்து, தங்களருமையான உயிரையுஞ் தத்தஞ்செய்து, இஸ்லாமின் உயர்பதவியையும், பெயரையும் நிலைநாட்டி விட்டார்கள். துருக்கியர் முஸ்லிம்கள் என்ற ஒரே ஓர் காரணத்தை முன்னிட்டுதான் அவர்களோடு அன்னியர்கள் யுத்தஞ் செய்கின்றனர். அத்துருக்கியர்களின் குதிரைக் குளம்பு தூசியை வானலோகத்து உயர்தர தேவர்கள் சுருமாவாக இட்டுக் கொள்ளக்கூடியன என்பது மிகையாகாது. அத்தன்மையுள்ள துருக்கியர்கள் பரிசுத்த இஸ்லாமுக்காக தங்களருமையான உயிரைப் பலி கொடுக்கத் தயாராகவிருக்கும் சமுகத்தை "லாமதஹபீ" மார்க்கமற்றவர்கள் என்று இந்தியாவிலுள்ள சில முஸ்லிம்கள் கூறுவதற்கு துணிந்துவிட்டது அதிஆச்சரியமானதா யிருக்கின்றது.

இப்படிப்பட்டவர்கள் தங்கள் நிலைமையை நோட்டமிடுகிறவர்களாக விருக்கவேண்டாமா? இவர்கள் இஸ்லாமுக்காக தங்களருமை உயிரைக் கொடுக்கவேண்டியதை விட்டும் விலகியிருக்கினும், சாதாரணமாய் இஸ்லாமின் சட்டதிட்டங்களின்படி நடந்துக் கொள்ளக் கூடிய அருளைக்கூட இவர்கள் பெற்றிருக்கவில்லை; தொழுகையை நிறைவேற்றுவது அவர்களின்பேரில் பர்லி (கடமையி) ல்லை; ஜமாஅத்தோடு தொழுகவேண்டுமென்பது அவர்களுக்கு கவலையில்லை. இஸ்லாமின் நடவடிக்கைகளை இரவு பகலாய் விளையாடக்கூடிய மதனையாகச்செய்து வைத்திருக்கின்ற இவர்கள் துருக்கியர்களை "லாமதஹபீ" என்று பிதற்றித்திரிவதைப் பார்க்கிலும், தங்கள் தங்கள்

[stamp]

சமூக சீர்திருத்தத்தில் தங்களின் வாழ்நாட்களைச் செலவு செய்கிறவர்களாகவிருக்கவேண்டாமா? இஸ்லாமுக்குழைக்கத் தக்க அறிவைப் பெற்றிராதவர்கள் பரிசுத்த இஸ்லாமுக்கு அதிக நண்பர்களாயிருக்கின்ற முஸ்லிம்களைக் காபர்களாக்குவது, முஸ்லிம்களுக்கிடையில் சண்டையை மூண்டுவது ஆகியவைகளில் ஈடுபடுவதற்கு சௌகரியமிருக்கிறதேயன்றி, பரிசுத்த இஸ்லாமின் அதிவுத்தமமான காரியங்களில் ஈடுபடுவதற்கு சௌகாசமேது?

இதாஅத்து இஸ்லாம்.

(ஜனாப் அப்துல் ஹக்சாஹிப் எழுதியது.)

"இதாஅத்" என்ற சொல்லுக்கு கீழ்படிதல் என்பதுவே உண்மைப் பொருளாகும். ஆகவே, இதில் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்படிதல் என்ற ரகசியம் பொதிந்திருக்கிறது. "இதாஅத்" என்பதும், "இஸ்லாம்" என்பதும் ஒரே பொருளைக் கொண்டதே. ஆகையால் இவ்விரண்டு சொற்கள் புணர்ந்து வரும்போழ்து "இஸ்லாம் மார்க்கத்தின் எல்லா ஆக்ஞைக்குட்படுகிறதென்ற கருத்தைக் கொண்டிருக்கின்றது. எல்லா துர்யெண்ணங்களையும் ஹிருதயத்திலிருந்து நீக்கி, ஒரே ஓர் பரிசுத்த அல்லாஹுதஆலாவுக்கு உண்மையாகக் கீழ்படிதலே உண்மை இஸ்லாமாகும்.

இதாஅத்து, இஸ்லாமின் பிரிப்பதற்கியலாத ஓர் பாகமாகும். கீழ்படிதலுக்கு எஜமானன் வேண்டியது அதிமுக்கியம். ஆகவே, அல்லாஹுதஆலா, அவனது ரஸூல், ஏவல், விலக்கல் செய்யும் அதிகாரி ஆகிய மூவரும் மற்றவர்கள் கீழ்படியத்தக்க தன்மையைப் பெற்றுள்ளனர் என குர்ஆன் ஷரீபும், ஹதீது ஷரீபும் அறிவுறுத்துகிறது. அவர்களுக்கு அடிபணிதலே "இதாஅத்" தெனப்படும். இம்மொழிக்கே "இஸ்லாம்" என்று அழைக்கப்பட்டது. வழிபாட்டில் இபாதத் இலாஹி (அல்லாஹுதஆலாவைத் தொழுவதே)யே முதன்மையானது. ஆகவே, காபர், முஷ்ரிக் ஆகியவர்களைத் தவிர மற்றவர்கள் அல்லாஹுதஆலாவுக்கு வணங்குவது அவர்களின் இம்மை மறுமைக்குரிய நலன்களைப் பெறுதற்கு முக்கியமான வழியென்பதில் ஏவருக்கும் சந்தேகமில்லை. நாம் உலக அதிகாரிக்கும், நம் தலை

வருக்கும் கீழ்படிந்து நடக்கில், அவர்கள் நம் அபிவிர்த்திக்கும், மேன்மைக்கும் உண்மை மனதோடு முயற்சியெடுத்துக் கொள்ளுவதை நாம் தினசரி கண்ணூடாட காண்கின்றோம். இந்நிலைமையில், இரா ஜாதி இராஜனுன, உலக ஜம்மங்களுக்கெல்லாம் ஏகத்தலைவனுன அல்லாஹுதஆலா தனக்கு வழிப்பட்ட அடிமைகளைக் கைவிட்டு விடுவானு? இல்லை ; ஒருபோது மில்லை. ஆனுல், அல்லாஹுதஆலா தனது குர்ஆன்ஷரீபில் பகிரங்கமாய் திருவுளமாகியிருக்கிறுன்:— நல்அமல் செய்தவனுடைய ஆத்மா நன்மையையும், தீமை செய்த வனுடைய அத்மா தீமையையும் அடையும். (அல்குர்ஆன்)

''ஸாலிஹான அமல்'' என்பது அவ்வழிபாட்டிற்கே. வழிபட்ட அடியார்களுக்கே ஈருலகிலும் நற்பயனுண்டுமென்றும், அவர்களுக்கு சுவனலோகமளிக்கப்படுமென்றும் ஆயிரக்கணக்கான விடங்களிற் குர்ஆன் ஷரீபில் கூறப்பட்டிருக்கின்றன. அல்லாஹுதஆலாவுக்கு கீழ்படியாது, குற்றம்புரிவது ஆகியவைகள் அவனை யதிகஷ்டத்தில் வீழ்த்தக்கூடியது. அதனுல், அவன் இருலோக நற்பாக்கியத்தை யிழந்து, கஷ்டத்திற்களாகிவிடுவான் என்பதன் உண்மை புலனு கிறது. ஒரு சமூகத்தின் அபிவிர்த்தியாகிறது அச்சமூகத்தின் ஒவ் வொரு நபரும் நல்லெண்ணம், நீதம், உண்மையுரைத்தல் மார்க்க நற்குணத்தின் பேரில் தரிபடல் ஆகியவைகளை பெற்றிருப்பதைக் கொண்டு யேற்படுகிறதென்பது அனுபவசித்தாந்தம். மேற்கூறிய சற்குணங்கள் யாவும் அல்லாஹுத ஆலாவுக்கு வணங்குவதனுலேயே அடையக்கூடும். எவனின் ஹிருதயத்தில் அல்லாஹுத ஆலாவின் அச்சமுண்டாய் இருக்கிறதோ, அவனே ஷைத்தானுடைய வஸ்வாஸ், ஹிருதயக் கெடுதி ஆகியவைகளைவிட்டும் தப்பிக்கொள்ளக் கூடும். அவ்வச்சத்திற்கே "ஈமான்" என்ற பெயராகும். ஏனெனில், ஈமானுகிறது அச்சத்து (அல்லாஹுத ஆலாவின் தண்டனை)க்கும், மேலெண்ணத்து (அல்லாஹுத ஆலாவின் மன்னிப்பு)க்கு மிடையி லிருக்கிறது'' என நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லம் அவர்கள் அருளியிருக்கின்றுர்கள். ஆகையால், நம் ஹிருதயத்திலும் அடிமைத்தனம் (வணக்கம் புரியுங்குணம்.) உண்டா யிருக்கவேண்டும் ; நம் எண்ணம், சொற்செயல் ஆகியவைகளில் தாழ்மையும், அடிபணிதலும் தன் ஜொலிப்பைப் பிரகாசித்துக் கொண்டிருக்கவேண்டும்.

அல்லாஹுத ஆலாவுக்கு அடிபணியாமலும், அவனுக்கு மாறு செய்த நூற்றுக்கணக்கான சமூகங்கள் அழிந்து நாசமுற்றுவிட்ட தைப் பற்றி சரித்திரங்கள் சாட்சி பகருகின்றன, யானைப்படை,

நம்ரூத், ஆத், தமூத், லூத் ஆகிய கூட்டங்களின் அதியுணர்ச்சியான சரிதைகள் குர்ஆன் ஷரீபில் அருளப்பட்டிருக்கின்றன. அல்லாஹுத ஆலாவுக்கு வழிப்படாது, மாற்றஞ்செய்த மேற்சொல்லிய சமூகங்களை அவர்களின் கெடுதியின் பலனை ஒரு நிமிஷத்தில் அடையும்படி அல்லாஹுத ஆலா செய்துவிட்டான்.

அல்லாஹுத ஆலாவுக்கு பின்னர் ரஸூல்மார்களுக்கு வழிபடுவதை இரண்டாந் தரமாகக் கூறியிருக்கின்ருன். ஏனெனின், ரஸூல்மார்க்கள் உலகிற்கு அல்லாஹுத ஆலாவின் பிரதிநிதிகளாகும். ஆகவே, அவர்களின் எல்லாச் சொற் செயல்களிலும் அல்லாஹுத ஆலாவின் பொருத்த மேற்பட்டிருக்கிறது. அந்நடவடிக்கைகள் அல்லாஹுத ஆலாவின் உண்மையான பூர்ண பொருத்தத்தைக் கொண்டிருப்பதற்கு மும்மாதிரியாகும். ஆகையால் ரஸூல்மார்களுக்கு வழிபட்டு நடப்பது, அல்லாஹுத ஆலாவுக்கு வழிப்பட்டு நடப்பதைப் போலாகும்.

தலைவர்களுக்கு வழிப்படுவது மூன்ருந் தரமானது. ஆத்மார்த்தீகமான வழிப்பாட்டை செய்யும்படியாய் இஸ்லாம் மார்க்கம் எவ்வளவு கண்டிக்கிறதோ; அவ்வளவாக அதிகாரிக்குக் கீழ்ப்பணிவதை வற்புறுத்தவில்லை. ஆனுல், "ஊலில் அம்ர்" என்பதற்கு பரிசுத்த உம்மத் முஹம்மதியாவின் சங்கைபொருந்திய உலமாக்களும், உஸ்தாதும், பெற்ருேரும், அவ்வக்காலத்து இராஜனும் என பொருளுண்டு. தீனுடைய உலமாக்களோ ஆத்மார்த்தீக அதிகாரியாகும். ஆகவே, அவர்களின் ஆக்கைகளுக்கு வழிப்படுவது வாஜிபாகும். குர்ஆன் ஷரீபில் பெற்ருேருக்கு வழிப்படுதலைப்பற்றி பல விடங்களில் கூறப்பட்டிருக்கிறது. உஸ்தாதுக்கு அடிப்பணிதல் பெற்ருேரின் பணிக்கு சமமாகவும், அதைப்பார்க்கிலும் விசேஷமானதாகும். உயிருக்கும் முதலுக்கும் பாதுகாப்புடன் நீதமாக பரிபாலனஞ் செய்யும் இராஜனுக்கும் அடிப்பணிய வேண்டும் என நம் சுத்தசத்திய பரிசுத்த இஸ்லாம் அறிவுறுத்துகிறது.

பரிசுத்த திருநபியின் மொழிகள்.

(1) நன்றி நிறைவேற்றும் ஹிருதயம், (2) 'அல்லாஹுதஆலா வைத் துதிக்கும் நா,' (3) கஷ்ட நிஷ்டூரங்களை யேற்று பொறுமைக் கொள்ளும் சரீரம், (4) தன் ஹிருதயத்திலும், தன் கணவனின் சொத்திலும் மோசஞ்செய்யாத மனைவி ஆகிய இந்நான்கையும் ஒருங்கே பெற்றவன் இருலோக பாக்கியவான்.

சாதாரணமானதும், கிழிந்த பழபப்பிடவைகளை அணிவது மூமினின் அடையாளமாகும். உலகில் கியாதியான உடுப்பை யணிந்தவனுக்கு, ஆகிரத்தில் அல்லாஹுதஆலா பழிப்புக்குரிய உடுப்பை உடுத்தாட்டுவான். அழகிய கியாதியான உடுப்பை யணிவதற்கு போதிய சக்தியிருந்தும், அப்படிப்பட்ட கியாதியான பிடவையை யணியாதிருப்பவனுக்கு அல்லாஹுதஆலா மேன்மையை அளிக்கின்றான். பிரகாசமானது, பட்டு போன்ற உடுப்புகளை யணியவேண்டாம்.

அல்லாஹுதஆலா தன் அடியார்களுக்களித்த பாக்கியத்தின் குணங்களை யவர்களில் காண்பதற்கு பிரியமுறுகிறான். அநியாய செலவின்றி சாப்பிடுங்கள், குடியுங்கள், உடுத்துங்கள், தர்மஞ்செய்யுங்கள். ஆனால், பெருமைகொள்ளாதீர்கள்.

அல்லாஹுதஆலாவைத் தவிரவுள்ள யெல்லா வஸ்துகளும் அழிந்துபோகக் கூடியவைகள். கெட்டவர்களோடு கூடியிருப்பதைக் காட்டினும் தனியாகவிருப்பது நன்று. தனித்திருப்பதைப் பார்க்கினும் நல்லவருடன் கூடியிருப்பது மேன்மை. நலவைக் கற்றுக் கொள்ளுவது மௌனமாய் இருப்பதைக் காட்டினும் நன்மையானது. கெடுதியைக் கற்பதைப்பார்க்கினும் மௌனமாய் இருப்பது உத்தமம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.